4. இமாம் ஹன்பல் (ரஹ்)

"இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் பனீ இஸ்ராயீல்கள் வழியில் தோன்றியிருப்பின், நிச்சியமாக ஒரு நபியாகப் பிறந்திருப்பார்கள்" என்கிறார் ஒரு பெரியார். உலகிலேயே மிகமிகத் தூய்மையான மனிதர்களில் ஆறாவது உத்தமர் அஹ்மதிப்னு ஹன்பல்; மற்ற ஐவரும் முறையே ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஜ்ரத் உமர் (ரலி), ஹஜ்ரத் உதுமான் (ரலி), ஹஜ்ரத் அலீ (ரலி), உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆகியோராவர் என்கிறார் பிரதம நூலாசிரியர் இமாம் பைஹகி.

இத்தகைய மகா மனிதரான ஷைகுல் இஸ்லாம், இமாமுல் முஸ்லிமீன் அபூ அப்தில்லாஹ் அஹ்மதிப்னு ஹன்பல், இப்ராஹீம் (அலை) அவர்களுடைய வமிசத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். அதனால் தானோ என்னவோ, இமாமவர்கள் சத்திய சோதனை ஒன்றுக்கு ஆளாகி மகத்தான வெற்றி கண்டார்கள்; சோதனை களிடையில் பொறுமை காட்டி சத்தியத்துக்கு மாறுசெய்ய மறுத்து சகல கஷ்டங்களையும் பொறுமையோடு ஏற்றார்கள். பின்னர் சத்தியம் வெற்றி பெற்று, அசத்தியம் அழிந்துபட்டபோது, செல்வ நிலை தங்களைத் தேடி ஓடி வந்த போதும், அதை விட்டும் அப்பால் ஓடிய மகாத்துறவி அவர்கள். சுன்னத்-வல்-ஜமாஅத்தில் சேர்ந்த மத்ஹபு ஒன்றை உண்டாக்கித் தந்ததுடன், தங்கள் எண்ணற்ற நூல்களி டையே அற்புதமான ஹதீஸ் தொகுப்பு ஒன்றையும் ஆக்கித் தந்தார்கள்.

பிறப்பு

இமாம் அஹ்மதிப்னு ஹன்பலின் தந்தையார் பெயர் முஹம்மது. அவர் தந்தை பெயர் ஹன்பல். அவர் தந்தையார் பெயர் பிலால். அவர் தந்தை அஸத். அவர் தந்தை இத்ரீஸ். எனவே, இவர்களும் தங்கள் பாட்டனாரின் பெயரையே தங்கள் பெயரின் கடைசியில் ஹன்பல் என்று இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

இவர்களுடைய தந்தையார் முஹம்மது அரசாங்கப் படையில் ஒரு சாதாரணப் போர் வீரராக வேலை செய்தார். அப்பாஸியாக் கலீபாக்கள் பதவியைக் கைபற்றுமுன், அவர்களுக்காகப் பிரச்சாரம் செய்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் நடுத்தரமான வயதானவராக இருக்கும்போதே மரணமடைந்து விட்டார். இமாமவர்கள் தாய் வயிற்றிலிருக்கும் போதே, இவர்களுடைய தாயாரும், தகப்பனாரும் மர்வ் என்ற ஊரிலிருந்து பக்தாதில் வந்து குடியேறினார்கள். அங்கே ஹிஜ்ரி 164 ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 12-ல் (கி.பி.780 நவம்பரில்) இமாமவர்கள் பிறந்தார்கள். இமாமவர்களின் தகப்பனார் இறந்த சமயம், இமாமவர்கள் இரண்டு வயதே நிரம்பிய பாலகராக இருந்தார்கள். வசதியற்ற நிலையிலிருந்த இமாமவர்களின் அன்னையார் அவர்களை வெகு கஷ்ப்பட்டு வளர்த்தார்கள். பக்தாதிலேயே கல்வி பயிலவும் தம்மால் இயன்றவரை ஏற்பாடு செய்தார்கள்.

ஹஜ்ஜும் கலாஞானப் பயிற்சியும்

இமாமவர்கள் தாங்கள் பதினைந்தாம் வயதில் (ஹிஜ்ரி 179-ல்) ஹதீஸ் பாடபோதனையைப் பயிலத் தொடங்கினார்கள். அக்காலையில் பக்தாதில் இமாம் அபூ ஹனீபாவின் தலையாய இரண்டு மாணவர்களில் ஒருவரும், பிரதான நீதிபதியாக இருந்தவர்களுமான இமாம் அபூ யூஸுப் அவர்களின் போதனை வகுப்புக்களில் சென்றமர்ந்து பாடம் கேட்டார்கள். அத்துடன், பக்தாதில், மற்றும் பல பெரியார்கள் நடத்திய கலாஞான வகுப்புக்களுக்கும் சென்று பாடம் கேட்டார்கள். இவ்விதம் ஒரளவுக்குத் தங்களுடைய ஹதீஸ் ஞானத்தை வளர்த்துக் கொண்ட இமாமவர்கள், தங்கள் இருபத்து மூன்றாம் வயதில் முதல் ஹஜ்ஜுக்காக மக்கா சென்று வந்தார்கள். அத்துடன் தொடர்ந்து பெரியார்கள் பலரின் கலாஞான சபைகளிலும் அமர்ந்து பாடம் கேட்டார்கள். பின்னர், ஹிஜ்ரி 191-இல் இரண்டாம் முறையாக அவர்கள் ஹஜ்ஜுக்குப் போனார்கள். அப்போதுதான் அவர்கள் இமாம் ஷாபியீயைப் பற்றி அறிந்து கொண்டு அவர்களோடு

பழக முடிந்தது. இமாம் ஹன்பலோடு வந்திருந்த நண்பர், வாலிப வயதினராகவும், மக்காவின் முப்தியாகவும் விளங்கிய இமாம் ஷாபியீயிடம், "பறவைகளை அவைகளின் கூடுகளில் தூங்கவிடுங்கள்" என்ற ஹதீஸுக்கு விளக்கம் கேட்டதையும்,அதற்கு அவர்கள் கொடுத்த விளக்கத்தால் அவர்கள்பால் ஹன்பலவர்கள் ஈடுபாடு கொண்டதையும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அடிக்கடி சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம், மற்றப் பெரியார்களுடைய கலாஞான வகுப்புக்களை விடவும், இமாம் ஷாபியீயின் போதனா மன்றத்தையே விரும்பி அவர்கள் அங்குச் சென்று பாடம் கேட்டார்கள். ஆனால், போதிய வசதியற்ற முறையில் ஹஜ்ஜுக்குப் போயிருந்த அவர்கள், இமாம் ஷாபியீயிடம் தொடர்ந்து அமர்ந்து பாடம் கேட்க வேண்டும் என்ற ஆவலிடையிலும் அவ்விதம் செய்ய இயலாது ஊர் திரும்ப நேரிட்டது.

இமாம் ஹன்பலவர்கள் மீண்டும் ஹிஜ்ரி 196-ல் ஹஜ்ஜுக்குப் போய், மூன்றாண்டுகள் அங்கேயே தங்கியிருந்து மூன்று ஹஜ்ஜுகளை முடித்துக் கொண்டார்கள். அத்துடன், மக்காவில் நடந்த பல ஹதீஸ் வகுப்புக்களில் கலந்து ஏராளமான ஹதீஸ்களையும், அவற்றுக்கான விளக்கங்களையும் சேகரித்துக் கொண்டார்கள். ஹிஜ்ரி 199-ன் ஆரம்பத்தில் அவர்கள் ஹிஜாஸைவிட்டு எமன் சென்றார்கள். அங்கே அக்காலையில் புகழ் பெற்றிருந்த பெரியார் முஹத்திஸ் அப்துர் ரஸ்ஸாக் அவர்களிடம் ஹதீஸ் பாடபோதனை பெற்றார்கள்.

இமாமவர்கள் தங்களுடைய மிகவும் ஏழ்மையான நிலையிலும், வெகு கஷ்டப்பட்டு இந்த ஐந்து ஹஜ்ஜுகளையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதுபற்றி அவர்கள் குறிப்பிடுகையில், "நான் ஐந்து தடவை ஹஜ்ஜு செய்துள்ளேன். அதில் மூன்று தடவைகள் நடந்தே சென்றேன். ஒவ்வொரு தடவையும் நான் நடந்து போகும்போது வழி தவறிவிடும். உடனே, "இறைவனின் நல்லடியார்களே, எங்களுக்குச் சரியான பாதையை விளக்குங்கள்!" என்று தொடங்கும் ஹதீஸ் ஒன்று நினைவுக்கு வந்தது. அதைப் படித்ததுமே சரியான

வழியைக் கண்டுபிடித்து இலகுவாக மக்கா போய்ச் சேர்ந்துவிட்டேன்" என்று தெரிவித்துள்ளார்கள்.

இமாமவர்கள் தங்கள் பிராயணத்தில் ஒரு தலையணையைக் கூடத் தங்களோடு கொண்டு போவதில்லை. ஏதாவது கல்லை எடுத்துத் தலையணையாக உபயோகித்துக் கொள்வார்கள். இவ்வாறே அவர்கள் அக்காலையில் இஸ்லாமியக் கலாஞானங்கள் செழித்து வளர்ந்தோங்கியிருந்த பல்வேறு நகர்களுக்கும் கால் நடையாகவே சென்று, ஹதீஸ்களைக் கேட்டுச் சேகரித்துள்ளார்கள்.

ஷாபியீயின் மாணவர்

கடைசியில் அவர்கள் தங்கள் சொந்த ஊரான பக்தாதுக்கே திரும்பினார்கள். அங்கே அப்போது இமாம் ஷாபியீயின் ஹதீஸ், பிக்ஹு பாடபோதங்கள் நடந்து கொண்டிருந்தன. அவற்றில் சென்றமர்ந்து, இமாம் ஷாபியீயின் தலையாய சீடராக அவர்கள் ஆகிக் கொண்டார்கள். கேட்கும் பாடங்களையெல்லாம் மனப்பாடமிட்டுக் கொண்டு எந்தச் சமயத்திலும் அதை வெளியிடக் கூடிய திறமை அவர்களிடமிருந்ததால் அவர்கள் மற்றவர்களை விடவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடிந்தது. இமாம் ஷாபியீயிடம் அவர்கள் பெற்ற கல்வி அவர்களுக்குப் பல வகைகளில் பயனுடையதாக இருந்தது. அதற்குமுன் அவர்கள் எத்தனையோ பெரியார்களிடம் பாடம் கேட்டிருக்கிறார்கள். எனினும், "நான் இமாம் ஷாபியீ அவர்களிடம் பயிற்சி பெறும்வரை ஹதீஸ்களில் நாஸிக், மன்ஸூக், ஃகாஸ், ஆம், முஜ்மல், முபஸ்ஸல் ஆகியவைபற்றி எதுவுமே அறியாதவனாக இருந்தேன்; இமாம் ஷாபியீ தான் இவற்றை எனக்குச் சரியாக விளக்கினார்கள்" என்று இமாம் ஹன்பலே தெரிவித்துள்ளார்கள். இவ்விதம் மூன்று ஆண்டுகள் கடுமையான பொருளாதார நெருக்கடியிடையிலும், அவர்கள் இமாமவர்களின் பாட போதனை களைக் கேட்டுப் பயனடைந்து கொண்டார்கள்.

பின்னர், இமாம் ஷாபியீ மக்கா சென்று, மீண்டும் பக்தாத் திரும்பி, எகிப்துக்குச் சென்ற சமயம் இமாம் ஹன்பலையும் தங்களோடு அழைத்தேக எவ்வளவோ முயன்றார்கள். வறுமையால் வாடிய ஹன்பல் தங்கள் ஆசானோடு செல்ல இயலாத நிலையிலிருந்தார்கள். எனினும், இமாம் ஷாபியீ தங்கள் அபிமான மாணவரிடம் மிகுந்த அன்பும், மதிப்பும் வைத்திருந்தார்கள். அதனால், அவர்கள் பக்தாதைவிட்டுப் புறப்படும் போது, இமாம் ஹன்பலைக் குறிப்பிட்டு, "நிகரற்ற பகீஹும், ஒப்பற்ற முஹத்திஸுமான ஒரு கலைக்குன்றை பக்தாதில் விட்டுப் போகிறேன்" என்று கூறியுள்ளார்கள். மேலும், அச்சமயம் அவர்கள் தமது மாணவரை நோக்கி, "ஹிஜாஸோ, ஷாமோ, இராக்கோ-நீங்கள் எங்குச் சென்றாலும், சரியான ஹதீஸ்கள் உங்களுக்குக் கிடைக்குமானால் அவற்றை உடனே எனக்கும் தெரிவித்து விடுங்கள். அப்போதுதான் நானும் அவற்றின்படி ஒழுகிச் சீர்பட ஏதுவாகும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

இமாம் ஹன்பலவர்கள் தங்களுடைய மகத்தான ஹதீஸ் கிரந்தமான முஸ்னதில் பல இடங்களில் தாங்கள் இமாம் ஷாபியீயிடம் பாடம் கேட்டதை மரியாதையோடு குறிப்பிட்டுள்ளார்கள். அத்துடன் அவர்கள் இமாம் ஷாபியீயிடமிருந்து கேட்ட ஹதீஸ்களையே ஒரு தொகுப்பாகத் திரட்டியும் நூலுருவில் எழுதி வைத்திருந்தார்கள்.

இமாம் ஷாபியீயையன்றி மற்றும், பஷர், இஸ்மாயீல், சுப்யான் பின் ஐனா, ஜரீர், யஹ்யா, அபூ தாவூதுத் தாயீ, அப்துல்லாஹ், அப்துர் ரஜாக், அலீ பின் ஐயாஷ், ஷாபியீ கந்தர், முஸ்தமிர், வகீவு ஆகிய பெரியார்களிடமும் இமாம் ஹன்பல் பாடம் கேட்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக இமாம் ஹன்பலவர்கள் கல்வி பெற்ற நிலையில்-இமாம் ஷாபியீ எகிப்துக்குச் சென்ற பின்னர்-தங்களுடைய முப்பத்து ஐந்தாம் வயதில் பக்தாதிலேயே பாட போதனையைத் தொடங்கினார்கள். வெகு விரைவில் அவர்களுடைய ஆழ்ந்த ஞானமும் ஹதீஸ்களை விவரிப்பதில் அவர்கள் காட்டிய பேணுதலும்,

ஆடம்பரமற்ற முறையில் அவர்கள் நடத்திய பாட போதனையும் நெடுகிலும் அவர்களுடைய புகழைப் பரப்பிவிட்டது. கலைகொழிக்கும் நகரமாக விளங்கிய பக்தாதில் பல நாடுகளிலும் இருந்து மாணவர்களும், அறிஞர்களும் வந்து குழுமினர். இவர்களில் இமாமவர்களுடைய புகழைக் கேள்வியுற்றவர்கள். அவர்களுடைய வகுப்புக்களில் வந்தமர்ந்து கல்வி பெற்றனர். ஹதீஸ் பாடபோதனையே இங்கு முதன்மையாக நடத்தப்பட்டதாயினும், பிக்ஹு சம்பந்தமாக மாணவர்கள் கொண்டுவரும் பிரச்சினைகளுக்கும் அவர்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. தங்களிடம் கல்வி பயிலவரும் மாணவர்கள் தரும் சொற்பக் காணிக்கையைக் கொண்டே இமாமவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்தி வந்தார்கள். ஆடம்பரமற்ற முறையில் பல ஆண்டுகள் அவர்கள் இந்தச் சேவையை அமைதியாகச் செய்து கொண்டிருக்கும் போதுதான் அவர்களுடைய வாழ்கையில் சோதனைப் புயல் வீசலாயிற்று.

மாமூனின் 'பகுத்தறிவு'

கலீபா ஹாரூனர் ரஷீது தூஸ் நகருக்கு அருகிலுள்ள சனாபாத் என்ற சிற்றூரில் ஹிஜ்ரி 193-ல் காலமானார். கிரேக்க நாட்டு எல்லையில், கிரேக்கர்கள் கொடுத்து வந்த தொல்லையைப் போக்க அவர்களை நேரில் அடக்கச் சென்றவர்தான் ஹாரூனர் ரஷீது. உடல் நலமின்றித் திரும்பி வரும்போது, வழியிலேயே காலமாகி விட்டார். கலீபா ஹாரூனுக்கும், ஜுபைதாவுக்கும் பிறந்த முஹம்மதுல் அமீன் கலீபாவானார். இவர் வீண் டம்பங்களிலும், கேளிக்கைகளிலும் பொழுது போக்கியதாலும், தமது சகோதரரான கலீபா ஹாரூனுக்கும் அவருடைய பாரஸீக மனைவிக்கும் பிறந்தவருமான மாமூனைப் பகைத்துக் கொண்டதாலும் செல்வாக்கிழந்து, கடைசியில் மாமூனின் பாரஸீக வீரர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார். ஹிஜ்ரி 198-ல் கலீபா மாமூன் பட்டமேற்றார். இவருடைய ஆட்சி திறமையானதாகவும், பல வகையில் சிறப்புடையதாகவும் இருந்தது. உலகிலேயே சிறந்த மாபெரும் முஸ்லிம் ஆட்சியாளர் இவர்தான் என்று கூறும்

சரித்திராசிரியர்களுமுண்டு. எனினும், இவர் கிரேக்க மொழியி லிருந்த இலக்கிய, தத்துவ நூல்களை அரபியில் மொழிபெயர்க்கச் செய்து, அவற்றைக் கற்றதால் எதையும் அந்த அடிப்படையிலேயே ஆராயத் தொடங்கினார். இதனால், இவர் முஃதஜிலாக்கள் விரித்த வலையில் விழ நேர்ந்தது. முஃதஜிலாக்கள் தங்கள் கொள்கையை ஆதரிக்காதவர்களைக் காபிர்கள் என்றும், அவர்களை வெட்டுவது குற்றமில்லை என்றும் நம்புபவர்கள் என்பதை முன்பே குறிப்பிட் டுள்ளோம். இவர்களைச் சேர்ந்த உலமாக்களும் பலருண்டு. இவர்கள் அடிக்கடி மாமூனைச் சந்தித்துப் பேசினார்கள். இதனால் இவர்கள் அவரைத் தங்கள் கொள்கை பகுத்தறிவு அடிப்படையில் அமைந்தது தான் என நம்ப வைத்து விட்டனர். எனவே, கலீபாவின் மார்க்கத் தையே பகுத்தறிவில் அமைத்துவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, சில காரியங்களைச் செய்யலானார். அதில் முக்கியமானது தான் "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதுதான்" என்ற கூற்றாகும்.

திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது என்ற நம்பிக்கை முஃதஜிலாக் களுடையதாகும். இப்போது அதுவே கலீபாவின் நம்பிக்கையுமாக ஆகிவிட்டது. முஃதஜிலாக்கள் அரசாங்க அவையில் அதிகச் செல்வாக்குப் பெற்றார்கள். அரச அவையையே அவர்கள் தாங்கள் விரும்பிபடி ஆட்டிப் படைத்தார்கள். தங்கள் கொள்கைப்படி தங்களோடு ஒத்துவராதவர்களை எல்லாம் வெட்டிவிட வேண்டும் என்ற முடிவைக் கலீபாவும் பின்பற்றும்படி செய்தார்கள். நேர்மையாளரான, நபி பெருமானாரின் சந்ததியார்களிடம் கூட-மற்ற கலீபாக்களைப் போலன்றி-அன்பு காட்டி மதிப்புக் கொடுத்தவரான, கலகங்களை எல்லாம் வெகு திறமையாக அடக்கியவரான மாமூன் இந்த விஷயத்தில் முஃதஜிலாக்களின் முடிவை ஏற்றுக்கொண்டார்.

மாமூனின் காலத்திலும் கிரேக்கர்களுடைய தொல்லை அதிகமானதாகவே இருந்தது. எனவே, அவர்களை அடக்கப் படையெடுத்துச் சென்ற அவர், கிரேக்க எல்லையிலுள்ள தராஸூல் என்ற பட்டணத்திலிருந்து எழுபத்தைந்தாவது மைலில் தியானா என்ற

இடத்தில் தமது படைகளை வைத்திருப்பதற்காகப் பலமான கோட்டை ஒன்றைக் கட்டினார். அந்த வேலையில் ஈடுபட்டவராக அவர் அங்கேயே தங்க நேர்ந்தது.

பக்தாதில் அச்சமயம் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த அஹ்மது இப்னு அபீ துவாத் என்பவர் ஒரு வெறிப்பிடித்த முஃதஜிலியாவார். இவர் யோசனையை ஏற்று, மாமூன் ஒரு பிரகடனம் தயாரித்தார். அதில் திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது தான் என்பதற்கான ஆதாரங்களைக் காட்டி அவர் எழுதியாவது: "அல்லாஹ் அனாதியானவனாக இருப்பதால், அவன் உண்டாக்கிய திருக் குர்ஆனும் அனாதியானதுதான். படைக்கப் பட்டதால் என்று சிலர் கூறுகின்றனர். அது மூடத்தனமாது. திருக்குர்ஆனிலேயே, 'திண்ணமாக, நாம் அதை அரபி மொழியில் குர்ஆனாக ஆக்கினோம்' எனறே கூறப்பட்டுள்ளது. அதாவது, தன்னால் உருவாக்கப்பட்டது திருக்குர்ஆன் என்பதையே இறைவன் இப்படித் தெரிவித்துள்ளான். 'இருளையும் வெளிச்சத்தையும் ஆக்கினான்' என்றுள்ள திரு வசனத்திலும் 'ஆக்கினான்' என்பதில் தானே படைத்தான் என்பது கருத்தாயுள்ளது! மேலும், "அத்தகைய முன்னால் நடந்த கருமங்களை யுடைய வேதங்களிலுள்ள விஷயங்களையும் நாம் உமக்குக் கூறினோம்" என்று பேசும் திருக்குர்ஆன், சில கருமங்களைப் பற்றிப் பேசும் வேதம்தான். எனவே, அந்தக் கருமங்கள் முன்னும், திருக்குர்ஆன் பின்னும் புதிதாக உண்டாக்கப்பட்டு, அந்தக் கருமங்களைப் பற்றிப் பேசுமாறு செய்யப்பட்டுள்ளது. மேலும் திருக்குர்ஆன் வசனங்களைக் கெட்டியாக்கி, உத்தரவுகள், ஆக்ஞைகள், உபதேசங்கள் ஆகியவைகளை அந்த வசனங்களில் விவரித்துள்ளோம்" என்றும் இறைவன் அருளியுள்ளான். எனவே, திருக்குர்ஆனைக் கெட்டிப்படுத்தும், விபரப்படுத்தும் இறைவன் அதைப் புதிதாகப் படைத்தான் என்பது தெளிவாகிறது.

"இதனால் திருக்குர்ஆன் அனாதியானது, படைக்கப்படாதது என்று கூறுபவர்கள் அனைவரும் மூடர்களும், அறிவீனர் களுமேயாவர். இவர்களை வன்மையாகத் தண்டிக்க வேண்டும். இத்தகையவர்களின் சாட்சியங்களைக்கூட ஏற்கக்கூடாது. அல்லாஹ் வின் வெளிப்பாட்டை (வஹியை)ப் பொய்யாக்கி, அவனை அறிய வேண்டியபடி அறியாதவனே மனிதரில் மிகவும் பொய்யனாவான்."

இவ்விதம் தாம் எழுதிய உத்திரவை, கிரேக்க நாட்டு எல்லை யிலிருந்த கலீபா மாமூன், அச்சமயம் பக்தாதில் தன் பிரதிநிதியாக இருந்து அரசாங்க நிர்வாகத்தை நடத்தி வந்த இஸ்ஹாக் இப்னு இப்ராஹீமுல் கஜாயி என்பவருக்கு அனுப்பி, அத்துடன் "பக்தாதிலும், அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள மார்க்க ஞானியர்கள் அனைவரையும் ஒரு சபையில் கூட்டி, அவர்களிடம் என் உத்தரவைப் படித்துக்காட்டி, இதன்மீது விசுவாசப்பிரமாணம் செய்யுமாறு செய்ய வேண்டும். இந்தப் பிரகடன்னத்தில் கண்ட விஷயங்களை ஒப்புக்கொள்ள மறுப்பவர்களை மார்க்கத் தீர்ப்பளிக்க உபன்னியாசம் நிகழ்த்தவோ, திருக்குர்ஆன் விரிவுரை நிகழ்த்தவோ அனுமதிக்கவும் கூடாது. அவர்களை எம் சமுகத்துக்கு அனுப்ப வேண்டும். நாம் அவர்களை விசாரித்துத் தக்க முறையில் தண்டிப்போம்" என்ற உத்தரவையும் சேர்த்திருந்தார்.

இமாமவர்கள் கைதியாதல்

இதன்படி பக்தாதிலுள்ள உலமாக்கள் அனைவரையும் அரண்மனை மண்டபம் வந்து கூடுமாறு இஸ்ஹாக் இப்னு இப்ராஹீம் சுற்றறிக்கை அனுப்பினார். அவ்விதம் யாவரும் வந்து கூடிய சபையில் அவர்களிடம் கலீபா மாமூனின் பிரகடனத்தைப் படித்துக் காட்டினார். அவர்களில் பெரும்பாலோர் கலீபாவின் வாளுக்கு அஞ்சியும், அவர் தரும் உபகாரச் சம்பளம், மானியம் முதலியன பறிபோகலாம் என்று பயந்தும் அந்தப் பிரகடனத்தை ஒப்புக்கொண்டு அதன் மீது விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தனர். கடைசியில், இமாம் அஹ்மது இப்னு ஹன்பலும், முஹம்மதிப்னு நூஹு என்பவரும் தான் இதில் விட்டுக் கொடுக்காமல், "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதல்ல; அனாதியானது; அது இறைவனின் திருவசனம்" என்று கூறினார்கள். உடனே, அந்த நிர்வாக அதிகாரி

அவர்கள் இருவரின் கால்களுக்கும் விலங்கிட்டு, கிரேக்க எல்லையில் தியானா என்ற இடத்தில் முகாமிட்டிருந்த கலீபா மாமூனிடம் அனுப்பி வைத்தார். அப்படிப் போகும் வழியில் இமாமவர்களுடன் கைதியாகச் சென்ற முஹம்மதிப்னு நூஹு காலமாகி விட்டார்.

இமாமவர்கள் மட்டும் கைதியாக அழைத்துச் செல்லப்பட்ட சமயம், கலீபாவின் அவையைச் சேர்ந்த, ஆனால் இமாமவர்களின் மேதாவிலாசத்தை மதித்துப் போற்றிய ஒருவர் அவர்களிடம் வந்து, "இமாமவர்களே, அமீருல் முமினீன் என்றுமில்லாத விதமாக இன்று வாளையுருவிவிட்டார். உங்களைத் தண்டித்தேயாக வேண்டும் என்று கோபக்கனல் பொங்கக் குமுறுகிறார். இதிலிருந்து நீங்கள் எப்படித்தான் தப்புவீர்களோ!" என்றார். அதற்கு இமாமவர்கள், "எல்லாம் அல்லாஹ்வின் சித்தப்படியே நடக்கும்" என்று கூறிவிட்டார்கள்.

சிறைவாசம்

அவர்கள் மேலும் ஒரு நாள் பயணம்போய் தியானாவை அடைந்த சமயம் கலீபா மாமூன் காலமாகிவிட்டார் என்ற செய்தியைத்தான் கேட்க முடிந்தது. அவர் இறந்ததும் அவரோடிருந்த அவர் சகோதரர் அபூ இஸ்ஹாக் முஹம்மது என்பவர் மாமூனின் மரண சாசனப்படி ஹிஜ்ரி 218-இல் தியானாவிலேயே முஃதஸிம்பில்லாஹ் என்ற பட்டத்துடன் கலீபாவானார். அவர் உடனடியாகக் கவனிக்க வேண்டிய அவசர காரியங்கள் பல இருந்ததால், இமாமவர்களைப் பின்னர் விசாரிக்கலாம் என்றும், அதுவரை அவர்களைப் பக்தாதிலேயே கொண்டுபோய்ச் சிறை வைக்குமாறும் உத்தரவிட்டுவிட்டார். இதனால், இமாம் ஹன்பலவர்கள் படகொன்றில் ஏற்றப்பட்டு மீண்டும் பக்தாதுக்கே கொண்டு வரப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டார்கள். ஒருக்கால் இமாமவர்கள் அறிவாளியான கலீபா மாமூனைச் சந்தித்துத் தங்கள் கட்சியை எடுத்துக் கூறியிருப்பின் அநேகமாக அவரை மனம் மாற்றித்

தங்கள் பக்கம் திருப்பியிருக்கக் கூடும். என்ன செய்வது, எல்லாம் இறைவன் நாட்டப்படித்தான் நடக்க முடியும்!

கலீபா முஃதஸிம் தமது தமையனார் கிரேக்கர்களை அடக்கி ஒடுக்குவதற்காகத் தியானாவில் கட்டிவந்த கோட்டையை விட்டு விட்டுப் பக்தாதுக்குத் திரும்பிவிட்டார். அவர் ஆட்சியில் தொடர்ந்து நடந்த குழப்பங்களைக் கவனிப்பதில் அவருடைய முழுக் கவனமும் சென்று விட்டது. அவருடைய பிரதம மந்திரியாக இருந்த அபூதாவூது என்பவர் முஃதஜிலாக்களிலொருவராவார். எனவே, திருக்குர்ஆனைப் பற்றிய மாமூனின் கொள்கையை இவரும் தொடர்ந்து அமல் நடத்த வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். அதன் பயனாய் மீண்டும் உலமாக்களை விசாரணை செய்து, அவர்களுடைய விசுவாசத்தை அறியும் வேலை தொடங்கி விட்டது.

இமாம் ஹன்பலவர்கள் கால் விலங்குடனேயே சிறையில் அடைக்கப்பட்டு பல விதமாகவும் வேதனைப்பட்டார்கள். அவர்கள் மீண்டும் கலீபா முஃதஸிமின் முன் விசாரணைக்குக் கொண்டு வரப் படுவதற்குள் ஓராண்டுக்கு அதிகமாகச் சிறைவாசத்தை அனுபவித்து விட்டார்கள். அவர்கள் சிறையிலிருந்த காலம் பதினெட்டு மாதங்கள் என்றும், இருபத்தெட்டு மாதங்கள் என்றும் இரண்டு வகையாகக் கூறப்படுகிறது.

சத்திய சோதனை

இமாமவர்கள் விசாரணைக்காகக் கால் விலங்குகளுடன் முஃதஸிமின் அவைக்குக் கொண்டு போகப்பட்ட சமயம், வழியில் அவர்களைக் கண்ட அவர்களுடைய சிறிய தகப்பனார் மகன் ஜமீல் என்பவர் அவர்களிடம் வந்து, "அஹ்மதே, மற்ற உலமாக்கள் திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதுதான் என்று கருத்துப்படப் பேசிக் கலீபாவிடமிருந்து தப்பிவிட்டனர். அதுபோன்று நீரும் தப்பிப்பது தான் நல்லது" என்றார். இந்த ஜமீலும் ஓர் ஆலிம்தான். இவர் கலீபாவிடம் சென்று திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதுதான் என்று கூறிச் சம்மானம் பெற்றார். இவரை நோக்கி இமாமவர்கள், "சகோதரா,

திருக்குர்ஆனையும், ஹதீஸையும் என் நன்மைக்காகத் திரித்துக் கூறச் சொல்கிறாயா? ஒருக்காலும் நான் அதைச் செய்ய மாட்டேன். சத்தியம் இறந்து, நான் உயிரோடிருப்பதைவிட, நான் இறந்து சத்தியம் உயிரோடிருப்பது உயர்ந்ததல்லவா!" என்று கூறிவிட்டு மேலே நடந்தார்கள்.

கலீபா முஃதஸிமின் அவையில் முஃதஜிலாக்களான ஆலிம்கள் பலர் கூடியிருந்தனர். முஃதஜிலா அதிகாரிகளும் நிறைந்திருந்தனர். அங்கே இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள். அவர்களைக் கண்ட அபூதாவூது கலீபாவை நோக்கி, "அமீருல் மூமினீன், அஹ்மது ஓர் இளைஞராக இருப்பார் என்றல்லவா எண்ணினோம்! இவர் முதியவராகவல்லவா இருக்கிறார்!" என்று கூறினார். இமாமவர்கள் கலீபாவுக்கு ஸலாம் கூறவே, அவர் அவர்களை அருகில் வருமாறு அழைத்தார். கால் விலங்கு வேதனை செய்ய அவர்கள் நடந்து சென்றார்கள். அருகே போனதும், "அமீருள் முமீனீன், உங்கள் திருப்பாட்டனாரான நபிபெருமானார் (ஸல்) அவர்கள் உங்களை எதன் பக்கம் அழைத்தார்கள்?" என்று வினாவினார்கள்.

"லாஇலாஹ இல்லல்லாஹ்வின் பக்கம்" என்று கலீபா பதிலளித்துக் கொண்டிருக்கும் போதே, அவருடைய பிரதமரான அபூதாவூது இமாமவர்களை நோக்கி, "திருக்குர்ஆன் உருவாக்கப் பட்டதுதான் எனபதை நீர் ஒப்புக் கொள்கிறீரா?" என்று வினவினார்.

"இல்லை. அது அல்லாஹ்வின் கலாம்-அனாதியானது" என்று இமாமவர்கள் மொழிந்தார்கள்.

அபூ தாவூதின் கையாளும், முஃதஜிலா உலமாக்களின் தலைவருமான பிஷ்ர் இடையில் வினவலானார். அவர் கேட்டார், "அல்லாஹ் இரண்டு உருப்புக்களால் பேசினான் என்பதையாவது நீர் ஒப்புக் கொள்கிறீரா?"

"இல்லை, நீர் சொல்வது தவறு. அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது" என்று இமாமவர்கள் உறுதியோடு பதிலுரைத்தார்கள்.

அபூதாவூது கேட்டார்: "அல்லாஹ் நாவாலும், உதட்டாலும், பேசினானா, வேறு அவயவங்களாலும் பேசினானா?"

இமாமவர்கள் "அல்லாஹ் வானத்தையும் பூமியையும் நோக்கி, 'நீங்கள் வழிபட்டவர்களாக, அல்லது வழிபடாதவர்களாக வாருங்கள்" என்று கூறியபோது, 'நாங்கள் வழிப்பட்டவர்களாகவே வந்தோம்" என்று அவை பதிலளித்ததாகப் படிக்கிறோமே, அவை நாவாலும், உதட்டாலும் அவ்விதம் கூறினவோ, அல்லது அவையல்லாதவற்றால் அவ்விதம் கூறினவா?"

இமாமவர்கள் கேட்ட இந்தக் கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. உடனே இமாமவர்கள் தொடர்ந்து, "கேவலம், உங்களைப் போன்றப் படைப்புகளான அவை எப்படிப் பேசின என்று அறிய முடியாத நீங்கள் உங்களையும், அவைகளையும், பிரபஞ்சம் முழுவதையுமே படைத்த அல்லாஹ் இன்னவிதம்தான் பேசி இருப்பான் என்று எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என வினவினார்கள்.

பிஷ்ர் கேட்டார்: "அஹ்மதே, இந்த வாதமெல்லாம் தேவை யில்லை, நீர் சாதுர்யமிக்கவர். மற்ற உலமாக்கள் ஒப்புக் கொண்டுள்ளதை நீரும் ஒப்புக்கொள்வீராயின் உம்முடைய பேச்சுக்கு இந்த நாட்டிலேயே அதிக மதிப்புக் கிடைக்கும்படியாகச் செய்யலாம்."

இமாமவர்கள் : "அவர்கள் எதை ஒப்புக்கொண்டார்கள்?"

"திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது என்பதை."

இமாமவர்கள் : "உருவாக்கப்பட்ட பொருள்களுக்கு மூன்று இயல்புகள் உண்டு. முதலாவதாக அவை ஒரு பொருளிலிருந்து வெளியாகின்றன. இரண்டவதாக, அவை படிப்படியாக வளர்ச்சி அடைகின்றன. மூன்றவதாக, அவை மூப்படைந்து மாண்டு போகின்றன. அவை காலத்தாலும், பருவங்களின் மாற்றங்களாலும், பேதலிக்கப்படுபவையாகும். இந்தக் குணங்களில் எதுவேனும் திருக்குர்ஆனுக்கு உண்டா?"

பிஷ்ர் : "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதல்ல என்றால், அது என்ன?"

இமாமவர்கள் : "திருக்குர்ஆன் பூமியில் அல்லாஹ்வின் இரகசியப் பொருள் (ஸிர்ரு); மறைவில் (கைபில்) அவனுடைய ஞானம் (இல்மு); அவனுடைய படைப்பில் அது அவனுடைய மகத்தான சக்தி (குத்ரத்)."

பிஷ்ர் : "இதற்கு ஆதாரம் யாது?"

இமாமவர்கள் : "திருக்குர்ஆன் முன் உண்டானதை உமக்குத் தெரிவிக்கிறது; இனி உண்டாகவிருப்பதை, அது உண்டாவதற்கு முன்னமேயே முன்னறிவிப்புச் செய்கிறது."

பிஷ்ர் : "எப்படி?"

இமாமவர்கள் : "உதாரணமாக, நிராகரிப்பவர்கள் தண்ணீர் தேடினார்கள்; அவர்களுக்குத் தண்ணீர் புகட்டப்படவில்லை" என்று முன்னுள்ள செய்தியொன்றை நமக்குத் தெரிவிக்கின்றது. "அல்லாஹ் உங்களுக்கு அருளிய தண்ணீரிலிருந்து (சிறிதை) எங்கள் மீது சொரியுங்கள்" என்று நரகவாதிகள் சுவர்க்க வாதிகளைப் பார்த்துக் கூறுவதாகவும், சுவர்க்க வாதிகள் சுவர்க்கத்தில் நுழைந்ததும், "நம் குறை நீக்கிய அல்லாஹ்வுக்கே சகல புகழும்! திண்ணமாக, அவன் நம் பாவங்களை மன்னிப்பவனாக இருக்கிறான். நம் அமலை ஏற்கிறான்" என்று அல்லாஹ்வைத் துதிப்பதாகவும் வரும் வசனங்கள், வரவிருக்கும் சம்பவங்களை முன்னறிவிப்புச் செய்பவையாகும். எனவே, இனி வரவிருக்கும் காரியங்களையும், அது முன்னமேயே அறிவித்துத் தருகிறது என்பது பெறப்படுகிறது."

இது இப்படித்தானா என்று இமாம் ஹன்பலவர்கள் பிஷ்ரிடம் வினவவே அவர், 'ஆம்' என்று தலையை அசைத்தார். உடனே இமாமவர்கள், "திருக்குர்ஆனிலுள்ள **குல்ஹுவல்லாஹு அஹது**' உருவாக்கப்பட்டதா?" என்று கேட்டார்கள். அவர் 'இல்லை' என்றார்.

"ஷஹிதல்லாஹு அன்னஹு லாஇலாஹ இல்லாஹுவல் மலா இகத்து வ உலுல் இல்மி காயிமின் பில்கிஸ்தி லா இலாஹ இல்லா ஹுவல் அஜீஸுல் ஹக்கீம்" நிச்சயமாக, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று நீதியாளனாகிய அல்லாஹ் சாட்சி பகர்கிறான், அவ்வாறே, அமரர்களும், அறிஞர்களும் அவனைத் தவிர வேறு இறைவனில்லை, (அவன் யாவையும்) மிகைத்தோன், ஞான முடையோன் என்று (சாட்சியம் பகர்கின்றனர்)" (அத் 3 : ஆயத்18) என்ற திருவசனம் உருவாக்கப்பட்டதா?" என்று வினவினார்கள். அவர் இல்லை என்றார். பின்னர், "ஜுலைகா யூஸுபை நாடினார்; யூஸுபு ஜுலைகாவை நாடினார்" என்ற திரு வசனம் உருவாக்கப்பட்டதா" என்று கேட்டார்கள். அவர் 'ஆம்' என்றார்.

"அப்படியானால் திருகுர்ஆனிலுள்ள சில வசனங்கள் அனாதி யானவை என்று விசுவாசம் கொள்கிறீர்; சிலவற்றில் மாற்றமான அபிப்பிராயம் கொண்டுள்ளீர். இது சரியா?" என இமாமவர்கள் வினவினார்கள்.

இமாமவர்களின் கேள்விக்கு யாரும் பதிலளிக்க இயலாது போக, உடனே கலீபா அவர்களை நோக்கி, "அஹ்மதே, நீர் திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது தான் என்று ஒப்புக் கொள்ளாவிட்டால் என்ன தண்டனை அனுபவிக்க நேரும் என்பதை அறிவீரா?" என்று வினவினார்.

இமாமவர்கள் : "அமீருல் மூமினீன், நான் திருக்குர்ஆன் வாக்கியங்களைப் பற்றி உங்கள் கருத்தை அறியலாமா? முதலாவதாக, **'வ இன் அஹதுன் மினல் முஷ்ரிகீனஸ் தஜாரக பஅஜ்ரு ஹத்தா யஸ்மஅ ஃகல்கல்லாஹு..."**

கலீபா : "நீர் ஓதுவது சரியன்று, இந்த வசனத்தின் கடைசியில், 'கல்கல்லாஹு' (அல்லாஹ்வின் சிருஷ்டி) என்று ஓதக்கூடாது; அது தவறு **'ஹத்தா யஸ்மஅ கலாமல்லாஹு (அல்லாஹ்வின் கலாம்)** என்று தான் ஓத வேண்டும்."

இமாமவர்கள் : நீங்கள் திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது என்கிறீர்கள், ஆனால், இப்போது அது அல்லாஹ்வின் கலாம் என்கிறீர்கள். அதிருக்கட்டும், இந்த வசனம் பற்றி உங்கள் கருத்தென்ன? **"அர்ரஹ்மானு ஃகலக்கல் குர்ஆன..."**

கலீபா : "இதையும் நீர் பிழைபடவே ஓதுகிறீர். நீர் சொல்வது போல் **'கலக்கல் குர்ஆன்'** (திருக்குர்ஆனைப் படைத்தான்) என்று சொல்வது சரியல்ல. **'அர்ரஹ்மானு அல்லமல் குர்ஆன்'** (திருக் குர்ஆனைக் கற்றுத் தந்தவன்) என்று தான் சொல்ல வேண்டும்.

இமாமவர்கள் : "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது என்று வாதாடும் நீங்கள், இப்போது அது உருவாக்கப் பட்டதல்ல என்று ஒப்புக் கொள்கிறீர்கள். நான் கேட்பது சரிதானா அமீருல் மூமினீன்?"

கலீபாவால் பதிலேதும் பேச முடியவில்லை. உடனே பிஷ்ர் என்பவர் கலீபாவை நோக்கி, "நீங்கள் இவரோடு விவாதிக்க வேண்டாம்! இவர் குதர்க்கவாதத்தில் தேர்ந்தவர்; சாதுரியமான பேச்சாலேயே எதிரியை மடக்குபவர்" என்று கூறினார்.

இமாமவர்கள் : "பிஷரே, நீர் சொல்வது சரியன்று. அல்லாஹ் வின்மீது ஆணையாக, நான் அல்லாஹ்வின் வேதத்தையும், எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸையும் தான் அடிப்படையாகக் கொண்டு பேசுகிறேன். என் சொந்த யுக்தியால் எதுவும் பேசவில்லை."

அபூதாவூது : "நீர் அமீருல் மூமினீன் சொல்வதை ஒப்புக் கொள்ள வேண்டும்."

இமாமவர்கள் : அவர் என்ன சொல்கிறார்?"

பிஷர் : "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது என்கிறார்."

இதற்கிடையே சபையின் நேர வரம்பு கடந்து விட்டது. கலீபாவுக்கு வேறு அலுவல்கள் காத்திருந்தன, அதனால், அவர் அதற்கு மூன்றாம் நாள் மீண்டும் விசாரணை தொடர்ந்தது. இமாம் அஹ்மதிப்னு ஹன்பலவர்கள் மிகுந்த வேதனையோடும் வருத்தத்தோடும் சபையில் வந்து நின்றார்கள். அவர்கள் வருந்துவதன் காரணம் என்னவென்று கலீபா விசாரித்தார்.

"அமீருல் மூமினீன், நேற்று முன் தினம் என்னிடம் **'குல்ஹு வல்லாஹு அஹது'** என்ற அத்தியாயம் பிணியுற்றிருந்தது. அது

சுகமடைவதற்காக நான் சிகிச்சை செய்தேன்; பயனில்லை, அது இறந்துவிட்டது. இன்று நான் அதை நல்லடக்கம் செய்துவிட்டு வருகிறேன்" என்று இமாமவர்கள் கூறினார்கள்.

இது கேட்ட கலீபாவும், சபையினரும் நகைக்கலாயினர். "திருக் குர்ஆன் வசனம் சாவதெப்படி? உமக்கென்ன கோளாறு" என்று கலீபா வினவலானார்.

இமாமவர்கள் : "அல்லாஹ்மீது சத்தியமாக திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதல்லவதாயின் அது சாகாது. நான் நேற்று முன்தினம் கூறியதுபோல, பிறப்பு-வளர்ச்சி-மூப்பு-மரணம் யாவும் படைக்கப் பட்டவைகளுக்குதான் உண்டு. நீங்கள் சொல்வதுபோல திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதாயின் அது மரணமடையுமல்லவா!"

இந்த வினாவுக்கு கலீபாவால் பதில் எதுவுமே கூற முடியவில்லை இமாமவர்களின் பேச்சிலுள்ள உண்மையை அவர் மனம் உணரலாயிற்று. ஆனால், அவரைச் சுற்றி இருந்தவர்கள் அவர் அந்தக் கொள்கையைவிட்டு நழுவி விடாதபடி தாங்கிப் பிடிக்க எப்போதும் ஆயத்தமாக இருந்தனர். எனவே, இச்சமயம் பிஷர் என்பவர் குறுக்கிட்டு, "அஹ்மதே, இந்த வாதமெல்லாம் வேண்டாம்! நீர் கலீபா சொன்னபடி செய்யும். அவருக்கு மாறுசெய்ய வேண்டாம்!" என்றார்.

இமாமவர்கள் : "உருவாக்கப்பட்டவன் தன்னைப் படைத் தவனுக்கே மாறு செய்யலாமா?" என்றார்கள்.

பிஷர் : "உம்மைத் தவிர மற்ற உலமாக்கள் யாவரும் திருக் குர்ஆன் உருவாக்கப்பட்டதுதான் என்று ஒப்புக் கொண்டுள்ளனர். (அவர்களை சமிக்கு செய்து அருகில் வரச் செய்து) என் காதிலாவது சொல்லிவிடும்!"

இமாமவர்கள் : "என்ன சொல்ல வேண்டும்?"

பிஷர் : "திருக்குர்ஆன் படைக்கப்பட்டதென்று. இதை நீர் என் காதினுள் சொன்னால் போதும், நான் உம்மைக் கலீபாவின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றி விடுகிறேன்."

இமாமவர்கள் : "நீர் என் காதினுள் சொல்லும் திருக்குர்ஆன் அல்லாஹ்வின் கலாம்தான், படைக்கப்பட்டதல்ல என்று. கூலி கொடுக்கப்படும் நாளில் நான் உம்மைக் கூலி கொடுப்பவனுடைய தண்டனையிலிருந்து காப்பாற்ற மன்றாடுகிறேன்" என பதிலிறுத் தார்கள்.

பிஷ்ர் இமாமவர்களிடம் அதிகமாகச் சமாதானமு் பேசலானார். இமாமவர்களின் வாதமே சரி என்பதைத் தாம் உணர்வது போலும், ஆனால், கலீபாவின் மனப்பான்மையை தம்மை எதிர்ப் பவர்களையே தலையைச் சீவுவதாய் இருப்பதால், அதிலிருந்து தப்புவதற்காக அவர் போக்கில் நடக்க வேண்டியதாய் இருக்கிறது என்று கூறுபவர் போலும் அவர் இமாமவர்களிடம் ரகசியமாக, "நீங்கள் அமீருல் மூமினீனோடு ஒத்துப் போவதைத்தான் நான் விரும்புகிறேன்" என்றார். உடனே இமாமவர்கள் கலீபாவைச் சுட்டிக் காட்டியவர்களாக, "படைப்புதான்" என்றார்கள். உடனே பிஷரும், மற்றும் இமாமவர்களிடம் அனுதாபம் கொண்டவர்களும், "அமீருல் மூமினீன், அஹ்மது நீங்கள் சொல்வதை ஒப்புக் கொண்டுவிட்டார். அவரை விடுதலை செய்யலாம்" என்றனர். கலீபா அதற்கு இணங்கியுமிருக்கலாம். ஆனால், கலீபாவின் பிரதம மந்திரியான இப்னு அபூதாவூது குறிக்கிட்டு, "இவரைப் போன்ற பிரபலமான ஓர் அறிஞன் அதை மக்களிடையே சொன்னால்தான் நல்லது" என்றார். உடனே கலீபா அவர் சொன்னதை ஒப்புக்கொண்டு, அரண்மனை முற்றத்தில் பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார்.

கயவர்கள் தந்த கசையடி

பல மாதங்களாகச் சிறையில் கிடந்து வாடிய மாமேதை இமாம் ஹன்பல் அவர்கள் பேசப் போகிறார்கள் என்ற செய்தி பக்தாதில் ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டது. அன்று மாலையில் நடந்த கூட்டத்துக்குப் பல்லாயிரவர் வந்திருந்தனர். சொற்பொழிவு மேடையின் (மிம்பரின்) அருகே கலீபாவுக்கு விசேஷ ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் அவர் வந்து அமர்ந்தார். அவருடைய மந்திரி, தளபதி மற்றும் அதிகாரிகளும், உலமாக்களும் சுற்றி

அமர்ந்திருந்தனர். முதுமையில் சிறை வாசத்தால் மெலிந்து, நலிந்து போயிருந்த இமாம் ஹன்பலவர்கள் முதன் முறையாகத் தங்கள் கால் விலங்குகள் அகற்றப்பட்டவர்களாக அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் மேடைமீது ஏறி நின்று கம்பீரமான குரலில் பேசினார்கள்:

"ஊர் பொதுமக்களே, என்னை அறிந்துள்ளவர்களுக்கு என்னைப் பற்றி எதுவும் சொல்லத் தேவையில்லை. என்னை அறியாதவர்களுக்கு மட்டும் என்னை நான் அறிமுகப்படுத்துகிறேன். நான் ஷைபான் கிளையைச் சேர்ந்த ஹன்பலின் மகன் முஹம்மதின் மகன் அஹ்மது ஆவேன். என் வாய் மொழியைக் கேட்டுப் பாடமிட்டுக் கொள்பவருக்கு அல்லாஹ் நல்லருள் புரிவான். எனக்கு அப்துர் ரஜாக் சொன்னார்-அவருக்கு மஃமர் சொன்னார்-அவருக்கு அப்துல்லாஹ் சொன்னார்-அவருக்கு நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: **'குர்ஆனன் அரபிய்யன் கையிமன் இவஜ'** என்பதில் **'கோணலல்லாத குர்ஆன்'** என்று அல்லாஹ் சொன்னதன் தாத்பரியம் உருவாக்கப்படாத குர்ஆன் என்பதாகும்." இதை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் மூன்று தடவை கூறிவிட்டு, **'திருக்குர்ஆன் அல்லாஹ்விலிருந்தே வெளியாயிற்று, அவனிடமே மீளும்'** என்று அருளினார்கள்."

இவ்விதம் இமாமவர்கள் பேசியதும் நெடுகிலும் பரபரப்பு உண்டாயிற்று. பலர் அவர்கள் சொன்னதை ஒரு வார்த்தை விடாமல் எழுதி மனனம் செய்து கொண்டார்கள். கலீபாவுக்கு இது பெருத்த ஏமாற்றமாக ஆகிவிட்டது. அவருடைய மந்திரி கோபத்தால் கொதித்தார். **"அல்லாஹ்விலிருந்து வெளிப்பட்டது. அவனிடம் மீளுவதெப்படி?"** என்று அவர் வினவினார். **"இறங்குதலால் அல்லாஹ்விலிருந்து வெளியாயிற்று; கட்டளையால் அவனிடம் மீளும்"** என்று இமாமவர்கள் சாந்தமாகவே பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் சொன்ன ஹதீஸ் உண்மையானதாக இருக்கும் என்று கலீபா உணர்ந்ததால் அவரால் எதுவும் பேச இயலவில்லை. "நீர் பெரிய பிடிவாதக்காரராகவல்லவா இருக்கிறீர்!" என்றார் அவர்.

இமாமவர்கள் அவரை நோக்கி, "அமீருல் மூமினீன், நான் என் சுய யுக்தியால் பேசவில்லை. நான் மக்கா, மதீனா, கூபா, பஸரா, குராஸான், தமாஸ்கஸ் போன்ற நகரங்களுக்கெல்லாம் சென்று, ஆங்காங்கேயுள்ள உலமாக்களிடம் இதுபற்றி விசாரித்துத் தெரிந்ததுதான் இது" என்று கூறவே, "சரி, இவரை இவர் போக்கில் விட்டுவிடலாம்" என்று கலீபா எண்ணியவராகத் தமது மந்திரியிடம் யோசனை கலந்தார். அவரோ, "இவரை இப்படி விட்டுவிட்டால், இவரைப் போன்று 'அராஜகமான' கருத்துக்களுடையவர்கள் துணிவடைந்து அரசாங்கத்தையே எதிர்க்க ஆரம்பித்து விடுவார்கள். மேலும், முந்திய கலீபா மாமூனுக்குத் தாங்கள் கொடுத்த வாக்கையும் மீறுவதாகும்" என்று கூறவே, "சரி, இலகுவான தண்டனை எதையும் அளியுங்கள்!" என்று கூறிவிட்டு, கலீபா அங்கிருந்து போய்விட்டார்.

மறுநாள் இமாம் அஹ்மதுக்கு நூறு கசையடிகள் கொடுப்பது என்று மந்திரியும் அவர் கூட்டாளிகளும் முடிவு செய்துவிட்டனர்.

மறுநாள் முற்பகலில் பொதுவான ஓரிடத்தில் இமாமவர்கள் கொணர்ந்து நிறுத்தப்பட்டார்கள். அவர்களுடைய இரண்டு கைகளும் இரண்டு பக்கங்களிலும் வளையங்களுள் திணிக்கப்பட்டுக் கட்டப்பட்டிருந்தன. அவர்கள் மீது அணிந்திருந்த சட்டையும் அகற்றப்பட்டிருந்தது. அவர்கள் வெறும் பைஜாமவுடன் நிறுத்தப் பட்டிருந்தார்கள். சவுக்கடி கொடுப்பவன் வந்து நின்றான். இமாமவர்கள் அடிபடுவதைப் பதைபதைக்கும் மனத்துடன் பலர் கூடி நின்று பார்த்தனர். "அஹ்மதிப்னு ஹன்பல் வழி தவறிய சித்தாந்த முடையவராய் இருப்பதால் கசையடிபடப் போகிறார். இது மற்றவர்களுக்கு எச்சரிக்கையாகட்டும்" எனச் சேவகன் ஒருவன் கத்தினான். உடனே சவுக்கைப் பிடித்தவன் முதல் அடியை அடித்தான்.

இமாமவர்கள் சொல்கிறார்கள் : "முதல் அடி என்மீது விழுந்ததும், **'பிஸ்மில்லாஹி'** என்றேன். இரண்டாம் அடி விழுந்த சமயம், **"லா**

ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹி" (தடுக்கும் சக்தியோ, ஏற்கும் சக்தியோ அல்லாஹ்விடமிருந்தன்றி வேறில்லை) என்றேன். மூன்றாவது அடி விழுந்ததும், **"திருக்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாகும்"** என்றேன். நான்காவது அடி விழும்போது, **"இறைவன் எங்களுக்கு விதிக்காதது எங்களைத் தொடாது என்று கூறுவீராக!"** என்ற திருவசனத்தை ஓதினேன்..."

அடிப்பவன் வேகமாகச் சவுக்கைக் கழற்றி வீசாலானான். எட்டாவது அடி அவர்கள் மேனியில் விழுந்தபோது அவர்களின் இடுப்பில் கட்டப்பட்டிருந்த பைஜாமாவின் கயிறு திரிந்து அறுந்து போய்விட்டது. அவர்களுடைய பைஜாமா தன் இடுப்பை விட்டு நழுவிக் கீழே விழுந்து விடலாம் என்ற நிலையை அடைந்து விட்டது. அவர்களுடைய கைகளோ மேலே கட்டப்பட்டுள்ளன! கூட்டம் வேறு அலை மோதுகிறது. இமாமவர்கள் கண்களில் உருக்கம் தோன்ற, முகத்தை வானை நோக்கித் தூக்கி உதட்டை உசுப்பினார்கள்.* அவ்வளவுதான், அவர்களுடைய பைஜாமாக் கயிறு இறுக்கிக் கட்டப்பட்டது போல, தன் பழைய இடத்தை விட்டு இறங்காமல் நின்று விட்டது! கூடியிருந்த அத்தனை மக்களும் இந்த அதிசயத்தைக் கண் கொண்டு பார்த்தனர்.

---

* "பைஜாமா அவிழ்ந்தபோது உதட்டை உசுப்பி நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' என்று பின்னர் இமாமவர்கள் வினவப்பட்டபோது அவர்கள் சொன்னதாவது: ''*யா கியாதல் முஸ்தகீதீன்-யா இலாஹல் ஆலமீன்-அந்த தஃலமு-அன்னீ காயிமுன் லிக பிஹக்கின் ஃபலா தஃதிக்லி ஔரத்தன்*'' (அடைக்கலம் தேடுவோருக்குப் புகலிடமானவனே, உலகினரின் ரட்சகனே, நான் உனக்காகச் சத்தியத்தைக் கொண்டு போராடுகிறேன் என்பதை நீ அறிவாய். எனவே, என் மானத்தைக் காப்பாற்று!) என்று நான் ஓதினேன்.''

விடுதலை

பார்த்தவர்களில் சிலர் விரைந்தோடிப்போய்க் கலீபா வாழும் மாளிகையின் வாயில் காப்போனிடம் இதைத் தெரிவித்தனர். அவன் அதைக் கலீபாவின் காதுகளுக்கு எட்டவிட்டான். உடனே, அவர் இமாம் அஹ்மதை விடுதலை செய்யுமாறு உத்தரவு அனுப்பினார். உத்தரவுடன் சேவகன் வருவதற்குள் இமாமவர்கள்மீது இருபத்தைந்து அடிகள் அடிக்கப்பட்டுவிட்டன. இமாமவர்கள் மயங்கி கீழே விழுந்து விட்டார்கள், அவர்களுடைய கைக் கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. மூர்ச்சை தெளிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நடந்தது ஹிஜ்ரி 221 ரமலான் மாதம் 25-ந் தேதி என்று இமாமவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இமாமவர்கள் வீடு திரும்பும் வழியில், மாமூன் காலத்திலிருந்தே பக்தாத் நகரின் நிர்வாகியாக இருந்துவரும் இஸ்ஹாக் இப்னு இப்ராஹீமுல் கஜாயி என்பவர் வீட்டில் இமாமவர்களைத் தங்க வைத்தனர். இமாமவர்கள் சிறைவாசத்திக்கிடையிலும் நோன்பு பிடிப்பதை விடவில்லை. இத்தனை கஷ்டப்பட்டும், கசையடிகளை வாங்கியும் நோன்பையும் விடவில்லை. அவர்கள் இருந்த நிலையைப் பார்த்து, அவர்களை நோன்பை விட்டுவிட்டுச் சிறிது பானம் அருந்துமாறு கேட்டதற்கு இமாம் அவர்கள் மறுத்துவிட்டார்கள். மாலையில் நோன்பு திறக்கும் நேரம் வந்த பின்னர் தான் நோன்பு திறந்தார்கள், அடிப்பது நிறுத்தப்பட்டு அவர்கள் வந்த உடனேயே, மாலையில் அஸருத் தொழுகையை ஜமாஅத்துடன் நின்று தொழுது மிருக்கிறார்கள். அவர்களுடைய உடம்பிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட காஜி இப்னு ஸமாஆ என்பவர் அவர்களை நோக்கி, "இரத்தம் சிந்தும் நிலையில் தொழுகிறீர்களே!" என்று வினவினார். அதற்கு இமாமவர்கள் மிகவும் அமைதியாக, "ஆம், ஹஜ்ரத் உமர் (ரலி) கூடத் தங்கள் உடலிலிருந்து இரத்தம் பீரிட்டுக் கொண்டிருந்த நிலையில் தொழுதிருக்கிறார்களே!" என்று பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் தங்கள் வீட்டை அடைந்ததும், வைத்தியர் ஒருவர் வந்து பார்த்து, அவர்களுடைய உடலிலிருந்த ரணங்களில் மருந்து வைத்துக் கட்டிவிட்டுப் போனார். இந்தக் கண்டத்திலிருந்து வெகு சிரமப்பட்டு அவர்கள் உயிர் தப்பினார்கள். ஆயினும், இமாமவர்களின் கை, கால், உதடு முதலியவற்றில் குளிமை தங்கி அவர்களுடைய மரணபரியந்தம் அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தது.

இந்தச் சத்தியசோதனையில் இமாமவர்கள் காட்டிய உறுதியையும், நிதானத்தையும் போற்றாத பெரியார்கள் இல்லை எனலாம். இமாமவர்களின் இந்தப் போராட்டதைப் பற்றிக் குறிப்பிடும் இமாம் முஜ்னி, "ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) முர்தத்துகளோடும், ஹஜ்ரத் உமர் (ரலி) பனீ ஸகீபாக்களோடும், ஹஜ்ரத் உதுமான் (ரலி) தாங்கள் முற்றுகையிடப்பட்டபோதும், ஹஜ்ரத் அலீ (ரலி) ஸிப்பீன் போராட்டத்திலும் காட்டிய நிகரற்ற உறுதியையும் தியாகத்தையும் இதில் இமாமவர்கள் காட்டியுள்ளார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதைப்பற்றி எழுதும் இப்னு மதனி என்ற பெரியார் "முர்தத்துகளோடு போராடுவதற்கு ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு அன்ஸார்களும், முஹாஜிர்களும் பக்க பலமாக நின்றார்கள். ஆனால், இமாமவர்களின் இந்தப் போராட்டத்தில் அவர்கள் தன்னந்தனியராக நின்றே போராடினார்கள்" என்று கூறுகிறார்.

கலீபா முஃதஸிம் தம்மால் இமாமவர்களுக்கு உண்டான கஷ்டங்களை உணர்ந்து அடிக்கடி தமது தூதுவர் ஒருவரை அவர்கள் வீட்டுக்கு அனுப்பி, அவர்களுடைய உடல் நலனை விசாரித்தறிந்து வந்தார். இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் இமாமவர்கள் வெளியில் செல்வதே இல்லை. ஜும்ஆ, ஜமாஅத் எதற்கும் வெளியே போவதில்லை. வீட்டிலேயே தொழுது கொள்வார்கள். ஹதீஸ் விளக்க வகுப்புக்களையும் அவர்கள் நிறுத்திவிட்டார்கள். அவர்களிடமிருந்த சொற்பமான நிலத்திலிருந்து பதினேழு தீனார்தான் வருவாய் வந்தது.

அதைக் கொண்டு அவர்கள் வெகு சிக்கனமாகக் குடும்பச் செலவை நடத்தி வந்தார்கள்.

கலீபா முஃதஸிமுக்கு இருப்பில் பிளவை வந்து வெகு கஷ்டப்பட்டார். அதனால் உடலில் பெரும் பகுதியான சதை வெட்டி யெடுக்கப்பட்டது. கடைசியில் ஹிஜ்ரி 227-ல் அவர் காலமானார். அப்போது, அவர் "என் இறைவா, இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் அவர்கள் விஷயத்தில் நான் செய்ததை மன்னித்தருள்! பிறர் சொல்லை நம்பி மதிமோசம் போனேன்" என்று பிரார்த்தித்தார் என்று ஹஜ்ரத் கௌதுல் அஃலமே தெரிவிக்கிறார்கள். அவர் காலமான செய்தி கேட்ட இமாமவர்கள், "நான் இம்மையிலும் மறுமையிலும் அவர் பிழையை மன்னித்தேன், அவர்மீது எனக்கு எந்தக் குற்றச்சாட்டுமில்லை" என்று கூறிவிட்டார்கள். "அவர் உங்களுக்குச் செய்த அநீதி என்ன, செய்த கொடுமைகள் என்ன, அப்படியிருக்க நீங்கள் ஏன் அவரை மன்னிக்க வேண்டும்?" என்று சிலர் அவர்களிடம் வினவினர். இமாமவர்கள் சொன்னார்கள் : "அல்லாஹ் தூயவன், எனக்கு அவர் செய்த ஒரு கொடுமைக்காக நான் அல்லாஹ்வின் சமுகத்தில் எம்பெருமான் (ஸல்) அவர்களுடைய சிறிய தகப்பனார் புத்திரர் (ஹஜ்ரத் அலீ) அருகில் நிற்கும் மாண்பை அல்லாஹ் எனக்களித்து விட்டான். அப்படியிருக்க நான் அவர்மீது கோபம் கொள்வதெப்படி!"

இதுபோன்றே அவர்கள் தங்களுக்குக் கொடுமைகள் இழைத்த முஃதஜிலாக்களையும் கூட மன்னித்து விட்டார்கள். இது பற்றித் அவர்களிடம் வினவியவர்களுக்கு, "உங்களை அல்லாஹ் மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா?" "அல்லாஹ் மிகமிக மன்னிப்போனும் அன்புடையோனுமாவான்" என்ற திருக்குர்ஆன் வசனங்களையும், "பிறரை மன்னித்தோர்க்கு இறுதி நாளில் இறைவன் முதன் முதலாகத் தன் நற்கூலியை அருளுவான்" என்ற ஹதீஸையும் அவர்கள் ஓதிக் காட்டினார்கள்.

சத்தியம் வென்றது

கலீபா முஃதஸிம் காலமானதும், அவருடைய புத்திரர் அபூ ஜஃபர் ஹாரூன் என்பவர் வாஸிக்பில்லாஹ் என்ற பட்டத்தோடு கலீபாவானார். இவருடைய ஆட்சியிலும் திருக்குர்ஆன் உருவாக்கப் பட்டதுதான் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டுப் பலர் தலை சீவப்பட்டனர். இவருடைய ஆட்சிக் காலம் நடந்த ஐந்து ஆண்டுகளிலும் இமாம் அஹ்மதவர்கள் வெளியில் எங்கும் போகவில்லை. ஹிஜ்ரி 232-இல் கலீபா வாஸிக் காலமானார். உடனே, இவருடைய சகோதரர் அபுல் பஜ்லு ஜஃபர் என்பவர் முதவக்கிலு அலல்லாஹ் என்ற பட்டத்தோடு கலீபாவானார். இவர் பதவி ஏற்றதும் முதல் காரியமாக "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதல்ல; அனாதியானது தான்" என்று பிரகடனம் செய்தார். அத்துடன், "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டது என்றே யாரும் பிரச்சாரம் செய்யக்கூடாது" என்றும் தடை விதிக்கப்பட்டது. ஏற்கனவே, "திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதல்ல என்று கூறிச் சிறை சென்றவர்கள் யாவரும் விடுதலை செய்யப்பட்டனர். முஃதஜிலாக் களான அதிகாரிகளெல்லாம் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். தனது தலைமையின் பிரதம மந்திரியாயிருந்த அபூ தாவூதையே இந்த கலீபா அவருடைய முஃதஜிலாக் கொள்கைகளுக்காக அவருடைய மகனுடன் சேர்த்துச் சிறையில் போட்டார். அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தார்.

இந்தக் கலீபாவின் தந்தையும், மாமூனின் சகோதரருமான கலீபா முஃதஸிம், பக்தாத் நகரில் திடீரென உண்டாகும் கலகங்களால் தமக்கு ஆபத்து நேரலாம் என்று எண்ணியவராகப் பக்தாத் நகரத்துக்கு வடமேற்கில் சில நாட்கள் பயணம் செய்ய வேண்டிய தூரத்திலுள்ள சமர்ரா என்ற இடத்தில் தமது தலைநகரை அமைத்திருந்தார். அப்போதிலிருந்து கிலாபத்தின் தலைமைப் பீடம் அங்கேதான் இருந்து வந்தது. கலீபா ஜஃபர் முதவக்கிலு அலல்லாஹ்வும் அங்கேயே

தங்கியிருந்தார். இவர் தமது தந்தையின் ஆட்சியில் இமாம் ஹன்பலவர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளையெல்லாம் நன்கு அறிவார். எனவே, அதற்கு மாற்றாக இமாமவர்களுக்கு மரியாதை செய்ய நாடினார். உடனே, தமது பக்தாத் பிரதிநிதியான இஸ்ஹாக்கு இப்னு இப்ராஹீமுல் கஜாயிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் இமாமவர்களை மிகுந்த மரியாதையோடும், கண்ணியத்தோடும் தமது அவைக்கு அழைத்து வருமாறு கேட்டிருந்தார். அவ்விதம் இஸ்ஹாக், இமாமவர்களுக்குச் செய்தி அனுப்பியபோது, அதற்கு இமாம் அவர்கள் இணங்க மறுத்து விட்டார்கள்.

அதேசமயம், பதவீ வர்க்கத்தைச் சேர்ந்த இப்னு ஸல்ஜி என்பவன் கலீபாவுக்குக் கடிதமொன்று எழுதினான். அதில், இமாமவர்கள் ஹஜ்ரத் அலீயின் பரம்பரையினரோடு கூடிச் சதி செய்வதாகவும், ஆட்சியைத் தமக்காகக் கைப்பற்ற முயலுவதாகவும், அதற்காகப் பொதுமக்களிடமிருந்து ஆதரவு தேடி வருவதாகவும் குறிப்பிட்டிருந்தான். அந்தக் கடிதம் கலீபாவிடம் கிடைத்த சமயம், அவர் பல காரணங்களால் அலவிகள் மீது கடுமையான நடவடிக்கை களை எடுத்திருந்தார். எனவே, இப்படியும் இருக்கலாமோ என்று அவருக்கு ஐயமுண்டாகி, தமது பக்தாத் பிரதிநிதிக்கு எழுதி, இமாமவர்களின் வீட்டைச் சோதனையிடுமாறு உத்தரவிட்டார்.

ஒரு நாள் நள்ளிரவில் கலீபாவின் படைவீரர்கள் வருகையை உவந்து ஏற்றுக் கொண்ட இமாமவர்களின் வீட்டைச் சுற்றிலும் வளைந்து கொண்டனர். அவர்கள் வீட்டைச் சோதனையிட வந்திருப்பதாக அதிகாரி கூறினார். "நான் அந்தரங்க சுத்தியோடு முதவக்கிலைக் கலீபாவாக ஏற்றவன். அவருக்காகத் தினமும் பிரார்த்திக்கிறேன். எனக்கு ஏன் இப்படித் தொல்லை தருகிறீர்கள்?" என்று இமாமவர்கள் கேட்டும், விடாது அவர்களின் வீட்டைச் சோதனையிட்டனர். ஆனால், அங்கே சந்தேகம் தரும் பொருள் எதுவுமில்லை.

இந்தச் செய்தியைக் கேட்ட கலீபா முதவக்கில், "இத்தகைய துறவு வாழ்வு வாழும் இவர்களைப் பற்றியுமா இத்தனை அவதூறு!" என்று எண்ணி வருந்தலானார். உடனே யாகூப் பின் இப்ராஹீம் என்ற தமது விசேஷத் தூதுவரிடம் பத்தாயிரம் திர்ஹம்களைக் கொடுத்து அதை இமாமவர்களிடம் அன்பளிப்பாகச் சேர்ப்பிக்கச் சொன்னார்.

பண உதவியை மறுத்தல்

அவர் பக்தாத் வந்து இமாம் அஹ்மதிடம் அந்தப் பண முடிப்பைக் கொடுத்தபோது, அவர்கள் அதை ஏற்க மறுத்து விட்டார்கள். வந்த தூதுவரோ, "இமாமவர்களே, நீங்கள் இதை ஏற்றுத்தானாக வேண்டும்! இன்றேல், கலீபாவுக்கு உங்கள் மீது மீண்டும் ஐயமுண்டாக்கப் படலாம்" என்று கூறவே, இமாமவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால், அந்தத் தூதுவர் போனதுமே, தங்கள் நண்பர்களை அழைத்து, அந்தப் பத்தாயிரம் திர்ஹம் களையும் அவர்களிடம் ஒப்படைத்து, பக்தாத், பஸரா மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலுள்ள ஏழைகளான முஹத்திஸ்கள், பகீஹுகள் ஆகியோரிடையே அதை வினியோகித்து விடுங்கள் என்று கூறி விட்டார்கள். அதேவிதம் அவர்களுடைய நண்பர்கள் அந்தப் பணத்தை உடனேயே வினியோகம் செய்து விட்டனர்.

தாம் அன்பளிப்பாகக் கொடுத்த பணத்தை இமாமவர்கள் பலருக்கும் தானமளித்து விட்டதைக் கேள்வியுற்ற கலீபா மிகவும் வருந்தினார். இதற்கிடையே பக்தாதில் கலீபாவின் பிரதிநிதியாக இருந்த இஸ்ஹாக்கும், அவருக்குப்பின் அவர் மூத்த மகன் முஹம்மதும் காலமாகி, அவருடைய இளைய மகன் அப்துல்லாஹ் கலீபாவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்குக் கலீபா ஒரு கடிதம் எழுதினார். அதில் இமாமவர்களைச் சகல மரியாதைகளோடும் தமது அவைக்கு அனுப்புமாறு கேட்டிருந்தார். அதன்படி அப்துல்லாஹ் அவர்களை அணுகி சமர்ராவுக்குப் புறப்படும்படி வேண்டினார்.

இமாமவர்கள், "நான் முதியவன்; பலஹீனத்தால் சிரமப்படுபவன்; அவ்வளவு தூரம் என்னால் பிராயணம் செய்ய முடியாது. என்னை வற்புறுத்த வேண்டாம்" என்று கூறினார்கள். அப்துல்லாஹ் பல விதமாக வற்புறுத்திக் கடைசியில் அவர்களைக் குடும்ப சகிதம் சமர்ராவுக்குப் புறப்படச் செய்தார்.

அவர்கள் கலீபாவின் தலைநகரை அடைந்ததும், அவர்களுக்கு அரச மாளிகை ஒன்றிலேயே இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த இடத்தில் தங்குவதை இமாமவர்கள் விரும்பாமல், ஒரு சிறு விடுதியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதில் தங்கள் குடும்பத்தாரோடு தங்கினார்கள். உடனே, அவ்வூரிலிருந்த ஆலிம்களும், அதிகாரிகளும் இமாமவர்களிடம் வந்து அவர்களுக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்திப் போகலாயினர்.

இமாமவர்கள் தங்கியிருந்த இடத்தை அலங்கரிப்பதற்காகக் கலீபா உயர்தரமான பொருள்களை அனுப்பினார். பல சுவையான உணவுகளையும், கனிகளையும், பனிக்கட்டியில் தயாரான பானங்களையும் அனுப்பினார். ஆனால், இமாமவர்களோ அவை எதையும் புசிக்காமல் நோன்பு நோற்றுக் கொண்டிருந்தார்கள். ஒரு சமயம், தொடர்ந்து மூன்று நாட்கள் எதுவும் உட்கொள்ளாது அவர்கள் நோன்பு நோற்பதைக் கண்ட அவர்களுடைய புத்திரர். அவர்களை மிகவும் வற்புறுத்தியதன் பேரில் அன்று மாலை சிறிது மாவைக் கரைத்து உண்டு நோன்பு திறந்தார்கள்.

கலீபா ஒரு சமயம் இமாமவர்களுக்குப் பெருந்தொகையொன்றை அன்பளிப்பாக அனுப்பினார். அதை அவர்கள் பிடிவாதமாக ஏற்க மறுத்து விட்டார்கள். அதைக் கொணர்ந்தவர், அதை ரகசியமாக இமாமவர்களின் புத்திரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார். இதை அறிந்த கலீபா இமாமவர்களின் புத்திரர்களுக்கு நாலாயிரம் திர்ஹங்களை மானியமாக ஏற்படுத்தினார். இது பற்றி இமாமவர்கள் கேள்விப்பட்ட போது மிகவும் வேதனைப்பட்டார்கள். தங்கள்

புதல்வர்களை அழைத்து, "நான் இன்னும் சில நாட்களே உயிரோடிருப்பேன்; அதற்குள்ளேயே நீங்கள் கலீபாவிடம் மானியங்களை ஏற்றுக் கொண்டு விட்டீர்களே! இதனால் அல்லாஹ்வின் சமூகத்தில் என் நிலை யாதாகுமோ என மிகவும் அஞ்சுகிறேன்" என்று வருத்தத்தோடு கூறினார்கள். *

இமாமவர்களுடைய உடல்நிலை சீர்கெட்டு வருவதையும் பல் வலியால் அவர்கள் வேதனைப்படுவதையும் கேள்வியுற்ற கலீபா தமது ஆஸ்தான வைத்தியரான இப்னு மாஸுவியாவையே அவர்களைக் கவனிக்க அனுப்பினார். அவர் அவர்களைப் பரிசோதித்துவிட்டுக் கலீபாவிடம் சென்று, "இமாமவர்கள் தொடர்படியாகப் பட்டினி நோன்பு பிடிப்பதாலும், இரவிலும் பகலிலும் விழித்து நீண்ட நேரம் வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதாலும் தான் பலஹீனமாக இருக்கிறார்களேயன்றி, மற்றப்படி அவர்களுக்கு உடல் கோளாறு எதுவுமில்லை" என்று கூறினார். இதை அறிந்த கலீபா மேலும் அதுபற்றி எதுவும் செய்ய இயலாது என்று கண்டு சும்மா இருந்துவிட்டார்.

---

*கலீபாவிடமிருந்து மட்டுமல்ல, வேறு எந்தச் செல்வரிடமிருந்தும் இமாமவர்கள் அன்பளிப்புக்களை ஏற்றதில்லை. ஒரு சமயம் எகிப்திலிருந்து ஹஸன் பின் அஜீஸ் என்ற பெரியாருக்கு அவருடைய குடும்பச் சொத்தின் பாகமாக ஒரு லட்சம் தீனார்கள் பக்தாத் வந்தன. உடனே, அவர் அதிலிருந்து மூவாயிரம் தீனார்களை ஒரு பையில் போட்டுக் கட்டி எடுத்துக் கொண்டு இமாம் அஹ்மதிடம் வந்தார். இமாமவர்களை நோக்கி, 'இவை எனக்கு ஆகுமான (ஹலாலான) வழியில் பாகமாகக் கிடைத்த சொத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இவற்றை ஏற்று உங்கள் குடும்பப் பராமரிப்புக்குச் செலவிட வேண்டும்'' என்று வேண்டினார். இமாமவர்களோ அவற்றையும் தங்களுக்குத் தேவையில்லை என்று கூறிக் கண்டிப்பாக ஏற்க மறுத்து விட்டார்கள்.

அத்துடன், அவர்கள் தமது சபைக்கு வர விரும்பாததை அறிந்த அவர் அவர்களை வற்புறுத்தாமலே விட்டுவிட்டார். ஆனால், அவருடைய தாய் எப்படியும் அவர்களைக் காண வேண்டும் என்று ஆவல் காட்டினார். எனவே கலீபாவின் சபைக்கு வராவிட்டாலும், கலீபாவின் சகோதரரான இளவரசருக்குத் தனி மாளிகை ஒன்றுண்டு; அதற்காவது அவர்கள் வர வேண்டும் என்று கலீபா இமாமவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதைத் தட்ட முடியாதபடியால் இமாமவர்கள் அங்கே சென்றார்கள். ஒரு திரைக்குப் பின்னால் கலீபாவின் தாயார் மறைந்து அமர்ந்திருந்தார். அந்த மாளிகைக்குக் கலீபாவும் வந்திருந்து, தம் தம்பியுடன் சேர்ந்து அவர்களை வரவேற்றார். இமாமவர்கள் யாவருக்கும் பொதுவாக "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறிவிட்டுப் ஓர் ஆசனத்தில் அமர்ந்தார்கள். அவர்களைக் கண்ணுற்ற கலீபாவின் தாயார் தமது மகனை அழைத்து வரச்செய்து, "இந்த மகானையா சதிகாரர் என்று சந்தேகப்பட்டாய்! அல்லாஹ் உன்னைக் காபாற்றி னான். இவர்களை உடனே பக்தாதுக்கு அனுப்பிவிடு!" என்று கூறினார். அவரும் அதற்கு இணங்கிவிட்டார். அத்துடன், தமது தம்பிக்கு இமாமவர்களை ஆசானாக நியமித்திருப் பதாகவும் கலீபா அவர்களிடம் கூறினார். இச்சமயம் பணியாள் ஒருவர் கலீபா வின் தாயாருடைய அன்பளிப்பு என்று விலையுயர்ந்த சால்வை யொன்றை அவர்கள்மீது போர்த்தினார். அவர்கள் அதை அப்பால் எடுக்காமல் போட்டுக் கொண்டார்கள். அதன்பின் அவர்கள் மிகுந்த மரியாதையோடு அனுப்பப்பட்டார்கள். இமாமவர்கள் இஸ்திக்பார் ஓதிக்கொண்டே ஜாகை சென்றடைந்தார்கள். அவர்கள் பக்தாத் செல்லவும் துரிதமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இமாமவர்கள் பக்தாத் சென்றடைந்ததும், தங்களுக்குக் கலீபாவின் தாயார் சம்மானமளித்த சால்வையை விற்று ஏழைகளிடையே வினியோகிக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். "நான் (ஆட்சியாளர்களான) இவர்களுடைய சகவாசமே வேண்டாம் என்று

ஒதுங்கிப் போகிறேன்; அப்படியும் எப்படியோ கலீபாவோடு பழகும் படியாகிவிட்டது" என்று கூறினார்கள். மேலும், "முன்னர் இவர்கள் மூலம் சிரமங்களை அனுப்பி அல்லாஹ் என்னைச் சோதித்தான்; இப்போது என் கடைசிக் காலத்தில் இவர்களுடைய செல்வங்கள் மூலம் என்னைச் சோதிக்கிறான்'' என்றும் கூறிப் பேணுதலுடனேயே கடைசிவரை வாழ்ந்திருந்தார்கள்.

இதன் பின்னர் ஒரு சமயம் பக்தாத் வந்த கலீபா, தம் தூதர் ஒருவர் மூலம் இமாமவர்களுக்கு ஆயிரம் தீனார்களை அனுப்பினார். அதை இமாமவர்கள் ஏற்க மறுத்ததுடன், "கலீபா எனக்கு மன மில்லாததை நான் செய்யாதிருக்க எனக்கு அனுமதி அளித்துள்ளார். இதில் எனக்குப் பிரியமில்லை. நான் அன்பளிப்பை ஏற்காததற்காக ஏதும் தவறாக எண்ண வேண்டாம்!'' என்று கூறிவிட்டார்கள். இமாமவர்களுடைய புத்திரர் அப்துல்லாஹ் சொல்கிறார் : "எங்கள் உறவினரில் பலர் ஏதாவதொரு வகையில் உபகாரச் சம்பளம் பெற்று வந்தனர். எனவே, அவர்களுடைய வீடுகளில் தாங்கள் வெறும் தண்ணீர்கூடக் குடிக்கக்கூடாது என்று தந்தையார் அவர்கள் எங்களைத் தடுத்திருந்தார்கள்."

எனினும், கலீபாவின் ஒரேயொரு வேண்டுகோளை மட்டும் இமாமவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். அதுதான், திருக்குர்ஆன் உருவாக்கப்பட்டதல்ல, அனாதியானது என்பதைப் பற்றி விளக்கமான நூல் ஒன்று எழுதித் தரும்படி அவர் கேட்டதாகும். அவ்விதம் இமாமவர்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

அந்தியகாலம்

ஹிஜ்ரி 241 ரபீயுல் அவ்வல் தொடக்கத்திலேயே இமாமவர்கள் மரணப்படுக்கையில் விழுந்து விட்டார்கள். அவர்கள் எதையும் சரிவர உட்கொள்வதில்லை. அப்போது உலமாக்களும், அதிகாரிகளும் வந்து தங்களைப் பார்த்துச் செல்வது பற்றி அவர்கள் மகிழ்ச்சியடையவார்கள்.

இமாமவர்கள் தங்கள் குழந்தைகளையெல்லாம் அருகில் அழைத்து வைத்து, அவர்களுக்காக இறைவனிடம் துஆக் கேட்டார்கள். இமாமவர்கள் காலமாவதற்கு ஐம்பது நாட்களுக்கு முன்னர் கூட, அவர்களுக்குக் குழந்தையொன்று பிறந்தது. அதற்குமுன் பிறந்த குழந்தை, அச்சமயம் நடக்கும் பருவத்தை எய்தியிருந்தது. அவ்விரு குழந்தைகளையும் அவர்கள் தங்கள் அருகில் வரவழைத்துப் பரிவுடன் தடவிக் கொடுத்து, "இந்தக் குழந்தைகளால் இப்போது நான் என்ன பயனடையப் போகிறேன்?" என்று ஏக்கத்தோடு வினவினார்கள். அப்போது அங்கிருந்தவர்கள், "இமாமவர்களே, நீங்கள் ஏன் ஏக்கமடைய வேண்டும்? இவ்விரண்டு குழந்தைகளும் பெரியவர்களானால் உங்களுக்காக நல்துஆச் செய்வார்களல்லவா!" என்று ஆறுதல் கூறவும் அவர்கள், "அப்படியானால் மகிழ்ச்சியே!" என்று கூறிச் சமாதானமடைந்தார்கள்.

உயிர் பிரியவிருந்த இறுதி நாட்களிலொன்றில் இமாமவர்கள் திடீரென்று, "தூர விலகு! தூர விலகிப்போ!" என்று கூச்சலிட்டார்கள். அருகிலிருந்தவர்கள், "நீங்கள் யாரை விலகிப்போகச் சொல்கிறீர்கள்?" என்று வினவினர். "அதோ, வீட்டு மூலையில் இப்லீஸ் வந்து அமர்ந்து தன் விரலைக் கடித்துக் கொண்டிருக்கிறான். 'இப்போதாவது என்னை விரட்டாமலிருங்கள்!' என்று சொல்கிறான். அதற்கு நான், முடியாது என்று கூறி அவனை விரட்டுகிறேன்" என்று பதிலளித்தார்கள்.

பிறகு தங்களுக்கு ஒலுச் செய்து வைக்கும்படி கூறியதோடு, உடலையும், கை கால் விரல்களின் இடுக்குகளையும் நன்றாகத் தேய்த்துக் கழுவும்படியும் வற்புறுத்தினார்கள். அவ்விதம் தேய்த்துக் கழுவப்படுகையில் திக்ருச் செய்து கொண்டே இருந்தார்கள். குளிப்பாட்டி முடிந்ததும், அவர்களுடைய பரிசுத்த ஆத்மா இறைவன் திருவடியை நாடிச் சென்றுவிட்டது. (இன்னலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்).

ஹிஜ்ரி 241 ரபீயுல் அவ்வல் பிறை 12 வெள்ளிக்கிழமை பகல் (கி.பி. 855 ஜூலை 31-ல்) இமாமவர்கள் காலமானார்கள்.

இமாமவர்களின் மரணம் கேட்டு பக்தாத் நகரமே திரண்டு வரலாயிற்று. பக்தாதில் கலீபாவின் பிரதிநிதியாக இருந்தவர், இமாமவர்களின் சடலத்தைப் போர்த்துவதற்காக கபன் துணியை அனுப்பி, அது கலீபாவின் ஆணைப்படி அனுப்பப்பட்டுள்ளதாகவும், எனவே, அதை ஏற்குமாறும் கூறி அனுப்பினார். ஆனால், உயிருடன் இருக்கும் வரை ஆட்சியாளர்களின் உதவியை ஏற்காத இமாமவர் களுக்காக இப்போது அவற்றை ஏற்க இயலாது என்று அவர்களுடைய புத்திரர்கள் அந்தத் துணியைத் திருப்பி அனுப்பி விட்டனர். சிறுவர்கள் கையால் நெய்யப்பட்ட துணிகளை விலைக்கு வாங்கிக் கபனாக உபயோகித்தனர். மேலும், தண்ணீர் உட்பட நல்லடக்கத்துக்கு வேண்டிய சகல பொருள்களையும் விலை கொடுத்தே வாங்கினர்.

தலை நகரிலிருந்து இமாமவர்களைக் குளிப்பாட்டுவதற்கென்றே எழுபத்திரண்டு பனூ ஹாஷிம்கள் வந்திருந்து அந்தப் பணியைச் செய்தனர். ஜும்ஆ குத்பாவுக்கு முன்னர் புறப்பட்ட மையித், அஸர் தொழுகைக்கே அடக்குமிடத்தை அடைய முடிந்தது. இந்த அடக்கம் சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒரு சம்பவமாகவே நடந்துவிட்டது. பல தடவை ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டு, ஒவ்வொரு தடவையும் எண்ணற்றவர்கள் அதில் கலந்து கொண்டிருக்கின்றனர். முதல் தடவை நடந்த ஜனாஸாத் தொழுகையை பக்தாதில் கலீபாவின் பிரதிநிதியாக விருந்த முஹம்மது பின் அப்துல்லாஹ்வே முன்நின்று நடத்தினார். பல லட்சம் பேர்கள் அதில் கலந்து கொண்டனர். "வேறு எந்த முஸ்லிம், அல்லது முஸ்லிமல்லாதாரின் பிரேத அடக்கத்துக்கும் இத்தகைய பெரும் கூட்டம் திரண்டதில்லை" என்பது பைஹகியின் அபிப்பிராய மாகும். பக்தாதிலுள்ள மகா பிருஷ் ஷுஹதா என்ற வீரத் தியாகிகளின் அடக்கஸ்தலத்துள் இமாமவர்களின் சடலம் நல்லடக்கம் செய்யப் பட்டது. ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டில் திகிரிஸ் நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இமாமவர்களின் அடக்கஸ்தலம் அழிக்கப்பட்டுப் போனதாகச் சொல்லப்படுகிறது.

"இமாமவர்கள் இறந்த சில நாட்களுக்கெல்லாம் நான் அவர்களைக் கனவில் கண்டேன். "அல்லாஹ் உங்களை எப்படி நடத்தினான்?" என்று வினவினேன். "அவன் என் பாவங்களை மன்னித்தான்" மேலும், என்னை நோக்கி, "அஹ்மதே, நீர் எனக்காக அடிப்பட்டீரா?" என்று கேட்டான். நான் "ஆம், இறைவா!" என்றேன். அப்படியானால் சதாவும் என் வதனத்தைப் பார்த்திருக்கும் பேற்றை உமக்கு அருளினேன்' என்றான் என இமாமவர்கள் தெரிவித்தார்கள்" என்று கந்தீ என்ற பெரியார் கூறுகிறார்.

மகான்கள் சொன்னவை

"சுப்யானுத் தௌரியின் மரணத்தால் பயபக்தியே மறைந்து விட்டது; இமாம் ஷாபியீயின் மறைவால் புனித சுன்னத்தே மறைந்து விட்டது; இமாம் அஹ்மதிப்னு ஹன்பலின் மரணத்தால் சன்மார்க்கத்தின் அடிப்படையே ஆட்டங்கண்டு, புதுமையான காரியங்கள் மிகைத்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்" என்று இமாம் புகாரியின் ஆசானும், இமாம் அஹ்மதிப்னு ஹன்பலின் மாணவரு மான குத்பா கூறியுள்ளார்கள்.

"இறைவனே இமாமவர்களுக்குத் தன் ஒப்பற்ற நல்லாசியை அருளவேண்டும். ஸஹாபாக்கள், தாபியீன்களின் தூய வாழ்கை முறையை இமாமவர்களும் வாழ்ந்து காட்டினார்கள். புனித இஸ்லாம் தங்களுக்கு எதிரில் களங்கப்படுத்திக் காட்டப்பட்டபோது அதை அவர்கள் ஏற்காமல், மகத்தான தீரத்தோடு அதை எதிர்த்து நின்று போராடி, இஸ்லாத்தின் பரிசுத்தத்தைக் காத்து நின்றார்கள்" என்று அபூ உமர் கூறுகிறார்.

முஸ்லிமா பின் முஸய்யிர் கூறுகிறார் : "ஒரு சமயம் நான் இமாம் அஹ்மதிப்னு ஹன்பலின் சபையில் அமர்ந்திருந்தேன். அப்போது முதியவர் ஒருவர் அங்கு வந்து 'உங்களில் அஹ்மது என்பவர் யார்?' என வினவினார். இமாமவர்கள், 'இந்த அடியேன் பெயர்தான்

அஹ்மது' என்று பணிவோடு பதிலளித்தார்கள். 'உங்களுக்கு இவனால் எதுவும் ஊழியம் ஆக வேண்டுமா?' என்றும் கேட்டார்கள். அவர் சொன்னார். 'நான் ஆயிரத்து நானூறு மைல்கள் கடந்து வந்துள்ளேன். அவ்விதம் வந்தது ஒரு விஷயத்தை உங்களிடம் தெரிவித்துவிட்டுப் போவதற்காகத்தான். அதாவது, நான் என் கனவில் ஆதம் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை நோக்கி, 'நீ அஹ்மதிடம் சென்று, அர்ஷிலிருப்பவர்களும், மற்றும் அமரர்களும் உங்களை நேசிக்கின்றனர். நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் உறுதியோடு நின்றதற்காக, உங்கள் விஷயத்தில் அமரர்கள் அதிக மகிழ்ச்சி கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிவிக்க வேண்டும்" என்று கூறினார்கள். அதனால்தான் நான் இங்கு வந்தேன்' என்றார்.

"ஹதீஸ்களை மனனம் செய்வதில் இமாம் அஹ்மதிப்னு ஹன்பலை மிஞ்சிய யாரையும் நான் பார்க்கவில்லை" என்கிறார்கள் அஹ்மது ஸயீது தாரமீ. "ஹன்பலவர்களின் சகவாசத்தில் அமர்ந்திருப்பது உண்மையிலேயே மறுமையின் சிந்தனை யைத்தான் தூண்டும். இம்மைக்கான எந்தப் பேச்சையும் அவர்கள் பேசமாட்டார்கள். அவர்களுக்கு உலக சம்பந்தமான எந்தக் காரியமுமில்லையோ என்று தான் அருகிலிருப்பவர்கள் எண்ணத் தோன்றும். அவர்கள் வேண்டுமென்றே எளிமையை உவந்தேற்று, எழுபது ஆண்டுகள் அதற்கு மாற்றமின்றி வாழ்ந்துவிட்டார்கள்" என்றும், "நான் இருநூற்றுக்கதிகமான முஹத்திஸ்களைச் சந்தித்து அளவளாவும் பேறு பெற்றேன். எனினும், இமாம் அஹ்மதிப்னு ஹன்பலைப் போல ஒப்பாரையும், மிக்காரையும் நான் காண வில்லை" என்றும் அபூ தாவூது சீஜிஸ்தானி எழுதுகிறார்.

இமாமவர்களின் பத்வாக்களும், சுயநிர்ணயமும் மற்ற இமாம் களுடையவைக்கு முற்றும் மாற்றமானவையாய் இருப்பினும், அவர்கள் நம்மிடமிருந்த மறைந்து எவ்வளவோ காலமாகி விட்ட பின்னரும் கூட சமநோக்கும், கலாஞானமும் பெற்ற யாரும்

இமாமவர்களின் அபிப்பிராயங்களைப் போற்றாமலிருக்க முடியாது. அவர்களுடைய தீர்ப்புக்கள் ஸஹாபாக்களுடைய பத்வாக்களின் பாணியிலேயே இருந்தன. தீர்ப்புக்களுக்கு அவர்கள் கொடுத்துள்ள தலைப்புகள்கூட ஸஹாபாக்கள் கொடுத்திருக்கும் தலைப்புகள் போலவே அமைந்துள்ளன. தங்கள் தீர்ப்புக்களுக்கு திருக்குர்ஆன், ஹதீஸிலிருந்து நேரடியான ஆதாரம் காட்டியிருப்பார்கள். எங்கேனும் ஸஹாபாக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அபிப்பிராயங்களைக் கூறியிருந்தால் தான் இமாமவர்கள் (இஜ்திஹாதின்படி) தங்கள் சுயமான முடிவை எய்துவார்கள். அதிலும் கூட இரண்டு வித அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பார்கள்.

வணக்கத்தில்

இமாம் அஹ்மதிப்னு ஹன்பலவர்கள் வணக்கத்தில் சிறந்தவர்களாக இருந்தார்கள். எத்தகைய கடுமையான நிலையிலும் அவர்கள் தொழுகையை விட்டதில்லை. அவர்கள் கால்களுக்கு விலங்கிடப்பட்டுப் பக்தாத் சிறையில் தள்ளப்பட்ட போது, தாங்கள் அடைக்கப்பட்ட இருட்டறையில் களைப்படைந்திருந்த அவர்கள் தேடியது ஒலுச் செய்வதற்கான தண்ணீரைத்தான். ஒரு பழைய பானையில் சிறிதளவு தண்ணீர் கிடைத்ததும் அது கொண்டு வெகு சிரமப்பட்டு ஒலுச் செய்துவிட்டு, விலங்கிடப்பட்ட கால்களுடன் நின்று தொழுதார்கள். தொழுகையை நிறைவேற்றிய பின்னரே அவர்களுக்கு ஓய்வு பற்றிய நினைவு வந்தது. இரவெல்லாம் விழித்து வணங்கியதில் அவர்கள் புகழ் பெற்றவர்களாவார்கள். அவர்கள் வாழ்நாளில் தொண்ணூற்றொன்பது தடவை இறைவனைக் கனவில் கண்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு தடவையாவது தாங்கள் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்பதற்கு மறந்துவிட்டார்கள். நூறாவது தடவை தங்கள் கனவில் இறைவனைக் கண்டபோது, 'இறைவா, உன் புனித முடுகுத்தலை அடைவதற்கு (உன்னை நெருங்குவதற்கு) மிகவும் சிறப்பான வணக்கம் யாது?" என்று வினவினார்கள். உடனே

இறைவன், "திருக்குர்ஆன் ஓதிவா!" என்று பதிலளித்தான். இமாமவர்கள், "அதன் அர்த்தம் அறிந்து ஓதவேண்டுமா, அல்லது வெறுமனே ஓதினாலும் போதுமா?" என்று கேட்டார்கள். இறைவன் சொன்னான், "எப்படி ஓதினாலும் சரியே, பயபக்தியோடு ஓதுபவன் என்னை நெருங்க முடியும்" என்று. இந்தத் தகவலை இமாமவர்களே வெளியிட்டுள்ளார்கள்.

குடும்பம்

இமாமவர்களும் மணம் புரிந்து கொண்டதிலும் அவர்களுடைய துறவு மனப்பான்மை நன்கு வெளியாகிறது. ஓரிடத்தில் இரண்டு சகோதரிகள் இருப்பதாகவும், அவர்களுள் ஒருத்தி மிகவும் அழகானவள் என்றும், மற்றவள் அழகற்றவள் என்றும், அவர்களில் அழகியை அவர்கள் மணந்து கொள்ளலாமென்றும் அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது, அந்த இரண்டு பெண்களில் அதிகமான பேணுதலும், அறிவும் உடையவள் யார் என்று இமாமவர்கள் வினவினார்கள். அழகற்ற பெண்தான் என்று சொல்லப்பட்டது. உடனே, அந்தப் பெண்ணையே தாங்கள் உவப்பதாகக் கூறி அவளை மணந்து கொண்டார்கள். கடைசி வரை அந்தப் பெண்ணோடு சிறப்பான குடும்ப வாழ்வு நடத்தினார்கள்.

இமாமவர்களுக்கு பல புத்திரர்கள் இருந்துள்ளனர். அவர்கள் காலமாகும்போது இரண்டு வயதிலும், ஐம்பது நாளிலும்கூட இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள் என்று படித்தோம். அவர்களிடமே கல்வி பெற்று மேதைகளான புதல்வர்கள் இருவரும் இருந்தனர். அவர்களில் மூத்தவரான முஹம்மது ஸாலிஹ் என்பவர் இஸ்பஹானில் நீதிபதியாகப் பதவி வகித்தார். இளைய புதல்வரான அப்துல்லாஹ் மாபெரும் கலாஞானியாகத் தமது தந்தையின் நூல்களைச் சீர்ப்படுத்தி வெளியிடும் பணியைச் செய்தார்.

நூல்கள்

இமாமவர்களின் நூல்கள் அறிஞர் உலகத்தால் பெரிதும் போற்றப் படுபவையாகும். மத்ஹபுகளின் சட்ட திட்டங்கள், அவற்றின் மூலங்களுடன், சன்மார்க்க நெறிமுறையின் ஏவல் விலக்கல் களையும், அவற்றின் சிறப்பையுமெல்லாம் இமாமவர்கள் விரிவாக விளக்கியுள்ளார்கள். இமாமவர்கள் எழுதியுள்ள நூல்களில் மிகவும் பிரபலமானதும், ஹதீஸ்களின் மகத்தான தொகுப்புமான 'முஸ்னது' மிகவும் முக்கியமானதாகும். இஸ்லாமிய உலகில் இன்றும் இது மதித்துப் போற்றப்படுகிறது. சுமார் இருபத்தெட்டாயிரம் ஹதீஸ்களைக் கொண்ட இந்தக் கிரந்தத்தைத் தொகுத்து வெளியாக்கியவர் இமாமவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் ஆவார். ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டிலிருந்து இந்த ஹதீஸ் களஞ்சியத்தை ஒரு ஸ்தாபனம் மதீனாவில் நபிபெருமானாரின் ரௌலாவில் ஐம்பத்தாறு நாட்கள் தொடர்ந்து படித்து முடித்து வந்ததாகத் தெரிகிறது.

இதையன்றி 'கிதாபுல் ஸலாத்' (தொழுகைப் பற்றியது) 'கிதாபுல் அமல்' (சன்மார்க்க செயல் முறைகள் பற்றியது), 'கிதாபுத் தப்ஸீர்' (திருக்குர்ஆன் வியாக்கியான உரை), 'ரத்து அலல் ஜனாதிகா' (திருக் குர்ஆன் உருவாக்கப்பட்டதென்பதற்கு மறுப்புகள் அடங்கியது), 'கிதாபுஜ் ஜுஹ்து' (துறவு பற்றிய விளக்கம்), 'கிதாபுல் மனாஸிக்' (ஹஜ்ஜு செயல் முறைகள் பற்றியது), 'கிதாபுல் ஈமான்' (மெய்விசுவாசம் பற்றிய விளக்கம்) 'கிதாபு மனாகிபுஅலீ' (ஹஜ்ரத் அலீ (ரலி) பற்றிய நூல்), 'கிதாபுத் தாரீக்' (வரவாற்று நூல் ஆகியவை) இமாமவர்களின் முக்கிய நூல்களாகும்.

இமாமவர்கள் பிக்ஹு சம்பந்தமாகத் தனி நூல் எதுவும் எழுதவில்லை என்றும், தங்கள் மாணவர்கள் அது பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் கொடுத்த பதில்களும், அவர்கள் கொடுத்த மார்க்கத் தீர்ப்புக்களும்தாம் தொகுக்கப்பட்டு ஹன்பலி மத்ஹபின் பிக்ஹுவாக ஆக்கப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது. இவற்றுள் 'மஸாயிலு ஸாலிஹ்' என்பது அவர்களுடைய மூத்த புதல்வர் ஸாலிஹ், பிக்ஹு சம்பந்தமாகக் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் கொடுத்த பதில்கள் அடங்கியதாகும். இது போன்று இமாமவர்கள் கொடுத்த தீர்ப்புக்கள் மட்டும் இருபது நூல்களில் தொகுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் அவர்களுடைய மாணவர்களாலேயே தொகுக்கப் பட்டுள்ளன.

இமாமவர்களுடைய இந்தத் தீர்ப்புக்களின்படி உண்டான மத்ஹபுதான் ஹன்பலி மத்ஹபு ஆயிற்று. இது மற்ற மூன்று மத்ஹபுகளையும் போல சுன்னத்-வல்-ஜமாஅத்துக்கு உட்பட்ட மத்ஹபாக ஏற்கப்பட்டுள்ளது. இந்த மத்ஹபில் சுயமான அபிப்பிராயத்துக்கு அதிகமான இடம் தரப்படவில்லை. சகல விஷயங்களையுமே ஹதீஸ் அடிப்படையில் அமைக்க எண்ணி யதால், போதுமான ஆதாரமற்ற ஹதீஸ்களையும் ஹன்பலி இமாமவர்கள் ஏற்றுள்ளார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஹன்பலி மத்ஹபு

ஹன்பலி மத்ஹபினர்தாம் இன்று மிகக் குறைவான வர்களாவர். இமாமவர்கள் காலமானபின், அவர்களுடைய மாணவர்கள் பலர் இந்த மத்ஹபின் மூலச் சட்டங்களை உருவாக்கி இதை நெடுகிலும் பரப்பினர். இவ்விதம் சுமார் நூற்றி இருபது மாணவர்கள் தீவிரமாக முயன்றுள்ளனர். இமாமவர்களிடம் கல்வி பெற்ற அவர்களுடைய இரண்டு புதல்வர்களையன்றி அஸ்வத், ஷாதான், அப்துர் ரஹ்மான் பின் மஹ்தி, வகீவு, யஹ்யா பின் ஆதம், யஜீத் பிக் ஹாரூன் அபூ பக்ருல் அஸ்ரம், ஹர்பு, பகீ, ஹன்பல பின் இஸ்ஹாக், ஷாபீன், மைமூனி, அபுல் காஸிம் ஆகியோர் அவர் களுடைய முக்கியமான மாணவர்களாவர். (ஹதீஸ் கிரந்தங்களின் தொகுப்பாளர்களான இமாம் புகாரி, முஸ்லிம், அபூ தாவூது முதலியவர்களும் இமாமவர்களிடம் பாடம் கேட்டதாகச் சொல்லப் படுகிறது.) ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் சிரியாவிலும், பலஸ்தீனிலும், இது அதிகமும் பரவியிருந்தது.

ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றுவோர் பாரசீகத்தின் நெடுகிலும் பரவியிருந்தனர். பிரபல நூலாசிரியரும், கடுமையான முறையில் மார்க்க செயல் முறைகளை வற்புறுத்தியவருமான இப்னு தைமியா ஹன்பலி மத்ஹபினர் தாம். ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டகை அவர் களும் இந்த மத்ஹபைப் பின்பற்றியவர்களேயாவர். இவர்களுடைய மகத்தான கிரந்தமான 'குன்யதுத்-தாலிபீ'னில் ஹன்பலி மத்ஹபின் மஸ்அலாக்கள் பலவற்றையும் காண முடிகிறது.

துருக்கி சுல்தான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் ஹன்பலி மத்ஹபு பரவுவது தடைபட்டது. எனினும், சென்ற நூற்றாண்டில் எழுந்த வஹாபி இயக்கத்தில் இந்த மத்ஹபின் கொள்கைகளே பின்பற்றப்பட்டன. இன்று இந்த மத்ஹபைப் பின் பற்றுவோர் ஆப்ரிக்கா, மத்தியக் கிழக்கு ஆகிய பகுதிகளில் மட்டும் உள்ளனர். அவர்களுடைய தொகையும் மிகக் குறைவாகும்.

இமாமவர்களின் கடிதம்

கடைசியாக, இமாமவர்களின் அபிப்பிராயங்கள் அடங்கிய ஒரு கடிதத்தின் முக்கியமான பகுதிகளை மட்டும் இங்கே தந்து இதை முடிக்கலாம். இமாமவர்களின் மாணவரும், அக்காலத்தில் இஸ்லாத்தில் பிளவுகளை உண்டாக்கி வந்தவர்களை எதிர்த்துப் போரிட்டு வந்தவருமான முஸத்தத் என்ற பஸராவாசி இமாமவர்களுக்குக் கடிதமொன்றெழுதி நபிபெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களின் அடிப்படையில் தமக்குப் போதனைகள் அருளுமாறு கேட்டார். அதற்குப் பதிலாக இமாமவர்கள் கடித மொன்று எழுதினார்கள். அதன் முக்கியமான பகுதிகள் வருமாறு:

(இமாம் அஹ்மதிப்னு ஹன்பலவர்கள் எழுதுகிறார்கள்:) "சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். தன் திருப்பொருத்தமும், நல்லிணக்கமும் எதிலுள்ளதோ அதையே அவன் எனக்கும், உனக்கும் மட்டற்று அருளுவானாக! தன் திருப்தியும், திருப் பொருத்தமு மில்லாததிலிருந்து அவன் நம்மைக் காபாற்றுவானாக! மேலும்,

அல்லாஹ்வுக்குப் பயந்து, பக்தியுடன் ஒழுகிச் சீர்பட்ட மெய்நேசர்களின் நல்லமல்களையே நீயும், நானும் செய்து சித்திபெற நல்லுதவி அளிப்பானாக! ஏனெனில், அத்தகைய புனிதமான நல்லமல்களே பூரணமான பணிவுக்கு அடையாளங்களாகும். நீயும், நானும் அல்லாஹ்வின்மீது பயபக்தி கொள்ளுமாறும், சுன்னத்-வல்-ஜமாஅத்தின் கொள்கையை ஏற்று நடக்குமாறும் வஸியத்துச் செய்கிறேன். ஏனெனில், சுன்னத்தை நிராகரிப்பவர்களுக்குரிய வேதனைகளும், சுன்னத்தின்படி அதிகமாகச் செயல்படுத்திச் செய்த செயல்களுக்கு நல்லடியார்கள் பெறவிருக்கும் நற்கூலியும் எத்தகையன என்பதை நீ அறிவாய்! "சுன்னத்தின்படியே முற்றும் ஒழுகும் மெய்நேசர்கள் சுவர்க்கம் புகுவார்கள்" என்ற ஹதீஸையும் நீ அறிவாய்.

"திருக்குர்ஆனின் போதனையைவிடத் தலையானதாக வேறு எதையும் கருதக்கூடாது. திருக்குர்ஆன் அல்லாஹ்வின் திரு வசனம்; உருவாக்கப்படாதது. அதில் முன் இருந்தவர்களைப் பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள்கூட உருவாக்கப்படாதவையே ஆகும். விதிவசப்பட்டோலையில் (லௌஹுல் மஹ்பூலில்) காணப்படும் விஷயங்களும் கூட உருவாக்கப்படாதவைதாம். அவை உருவாக்கப் பட்டவை என்று கூறுவோரும் காபிர்களே; அவர்களை காபிர்களல்லர் என்போரும் காபிர்களே.

"திருக்குர்ஆனுக்கு அடுத்தபடிதான் நபிபெருமானார் (ஸல்) அவர் களுடைய ஹதீஸ்கள் முக்கியமானவையாகும். அத்துடன், ஸஹாபாக்கள், தாபியீன்களின் வழி முறையையும் நாம் பின்பற்றி ஒழுகவேண்டும்.

"நபிபெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகள் அனைத்தையும் உண்மை கொண்டு, சுன்னத்தைச் சம்பூரணமாக ஏற்று ஒழுகுவதே ஈடேற்றத்துக்குரிய மார்க்கமாகும். நமக்கு முன் வாழ்ந்த மகான்களும், இக்கால அறிஞர்களும் அதன்படியே நடந்து காட்டியுள்ளனர்; காட்டுகின்றனர்.

"ஏகத்துவத்தின் (தௌஹீதின்) கலிமாவை வாயால் மொழி வதுடன், செயல் முறையிலும் அமல்படுத்த வேண்டும். அதுவே மெய்விசுவாசத்தின் அடையாளமாகும். நல்லமல்களைச் செய்வதால் மனிதன் சீர்பட்டு உயர்வதுடன், பாவ காரியங்களைச் செய்வதால் சீரழிந்து தாழ்ந்து விடுவான். சில சமயம் மனிதன் ஈமான் என்ற வட்டத்திலிருந்து நழுவி, இஸ்லாம் என்ற வட்டத்துக்குள்ளும் இறங்கி விடுவான். பாவமன்னிப்பு வேண்டி (தௌபாச் செய்து) புனிதப்படுவதால், மீண்டும் மூமின் (ஈமான் கொண்டவன்) ஆகலாம். ஒரு முஸ்லிமை, ஷிர்க் அல்லது ஏதேனும் ஒரு பர்லை மறுப்பது தவிர வேறு எந்தக் கருமமும் இஸ்லாத்தை விட்டும் அப்புறப்படுத்தி விடாது. ஒரு முஸ்லிம் ஏதேனும் ஒரு பர்லை (அது பர்லு அல்ல என்று மறுக்காமலே) அலட்சியமாகத் தவிர்த்துக் கொண்டிருந்தால் அந்த நிலையிலும் அல்லாஹ் நாடினால் அவனை மன்னிப்பான்; அல்லது தண்டிப்பான்.

"இஃதிப்படியிருக்க முஃதஜிலாக்களோ, தெரிந்தோ தெரியா மலோ பாவ காரியங்களைச் செய்வபவர்களையும் காபிர்கள் என்றே கூறிவிடுகின்றனர். எனவே, முஃதஜிலாக்களின் முடிவுப்படி ஆதம் நபி (அலை) அவர்களும், யூஸுப் நபி (அலை) அவர்களின் சகோதரர் களும் கூடக் காபிர்களே. மேலும், அவர்களின் முடிவுப்படி ஒரே ஒரு தானியமணியைக் திருடுபவனும் நரகவாதியாவதுடன், அவன் மனைவியும் தலாக்குப் பெற்றவளாவாள்; அவன் ஹஜ்ஜு செய்திருந்தாலும் மீண்டும் ஹஜ்ஜு செய்வது அவனுடைய கடமையாகி விடுகிறது. நிச்சயமாக, இவ்வாறு கூறித்திரிபவர்களே காபிர்களாவர். இவர்களோடெல்லாம் சகவாசம் கொள்ளக்கூடாது. இவர்கள் அறுத்துக் கொடுக்கும் இறைச்சியையும் உண்ணக்கூடாது.

"இவ்விதம் ராபிஜிகள் (ஷீயாக்கள்) ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களை விட ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களை உன்னதமானவர் களாகவும், ஈமானில் தலையானவர்களாகவும் கருதுகின்றனர். மேலும், திருக்குர்ஆனில், "முஹம்மது ரசூலுல்லாஹ்வும் அவரோடு

இருப்பவரும்..." என்று கூறப்படும் திருவசனத்தில் 'அவர்களோடு இருப்பவர்' என்பது ஹஜ்ரத் அலீயையே குறிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். இது சரியன்று. அது ஹஜ்ரத் அபூபக்கரையே குறிக்கிறது என்பதற்குத் தக்க சான்றுகள் உண்டு. இவ்வாறு ஹஜ்ரத் அபூபக்கரின் மெய்விசுவாசத்தையே குறைத்துப் பேசுபவர்கள் திருக்குர்ஆன், ஹதீஸின் போதனைகளுக்கே மாறு செய்பவர்களாவர். ஹஜ்ரத் அபூபக்கர் தங்கள் முப்பதாம் வயதில் ஈமான் கொண்டார்கள். அச்சமயம் ஹஜ்ரத் அலீ (ரலி) ஏழே வயதுப் பாலகராக இருந்தார்கள். அந்த நிலையில் இஸ்லாத்தின் கடமைகள் ஹஜ்ரத் அலீ (ரலி) மீது கடமையாகமாட்டாது அல்லவா!

"அல்லாஹ்வின் தீர்ப்பு-விதிப்பு(கலா, கத்ரு)களின் மீதும், நன்மை தீமை யாவும் அல்லாஹ்வின் ஆணையாலேயே உண்டாகின்றன என்றும் நாம் ஈமான் கொண்டுள்ளோம். பிரபஞ்சத்தையும், அதிலுள்ளவை அனைத்தையும் படைக்கு முன்பே சுவர்க்கத்தையும், சுவர்க்க வாதிகளையும் இறைவன் படைத் துள்ளான், சுவர்க்கத்தின் சர்வ சௌபாக்கியங்களும் என்றென்றும் அழியாமல் நிலை பெற்றிருப்பவை என்றும் நாம் ஈமான் கொண்டு ள்ளோம். சுவர்க்கத்தின் அருட்கொடைகள் அழிந்து படுபவை என்று கூறுபவர்கள் காபிர்களாவர். இது போன்றே நரகம் பற்றியும் நம் ஈமான் நிலை பெற்றுள்ளது. "நபி பெருமானாரின் ஷபாஅத்தால் ஒரு கூட்டம் நரகிலிருந்து விமோசனம் பெற்று சுவர்க்கம் புகுவார்கள்" என்றும், சுவர்க்கவாதிகள் நிச்சயம் முகக் கண்களால் அல்லாஹ்வைத் தரிசிப்பார்கள் என்றும், ஹஜ்ரத் மூஸா நபி (அலை) அவர்களோடு அல்லாஹ் வசனித்தான் என்றும், ஹஜ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களைத் தனக்குத் தோழராக ஆக்கிக் கொண்டான் என்றும், நன்மை தீமையை நிறுக்கும் தராசு, கடக்கவேண்டிய பாலம் உண்டென்றும், நபிமார்கள் அனைவரும் உண்மையானவர்கள், ஹஜ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவன் திருத் தூதருமாவார்கள் என்றும், ஷபாஅத்தும், அர்ஷும், குர்ஸும் உண்டென்றும், மலக்குல் மௌத்தே உயிர் வாங்குகிறார் என்றும், பிறகு கேள்வி கணக்குக்காக மீண்டும் உயிர் சடலத்தில்

புகுத்தப்படும் என்றும், மதீனாவிலிருக்கும் கப்ரு நபிபெருமானார் (ஸல்) அவர்களுடையது தான் என்றும், அதனை அடுத்துள்ள கப்ருகள் இரண்டும் ஹஜ்ரத் அபூபக்கர், உமர் (ரலி) ஆகிய இருவருடையது என்றும், அடியார்களின் இதயம் அல்லாஹ்வின் பார்வையிலேயே இருக்கிறது என்றும், இதே உம்மத்தில் தஜ்ஜால் வெளிப்படுவான் என்றும், அப்போது ஹஜ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் வந்து அவனைக் 'கத்' என்ற வாயிலின் அருகில் கொன்று விடுவார்கள் என்றும் ஈமான் கொண்டுள்ளோம்.

"சுன்னத்-வல்-ஜமாஅத்தின் உலமாக்கள் மறுத்துள்ளவை அனைத்தும் ஆகாதவைகளே. சகலவித 'பித்அத்' களை விட்டும் விலகிக்கொள்ள வேண்டும். ஹஜ்ரத் அபூபக்கர், உமர், உதுமான், அலீ, தல்ஹா, ஜுபைர், சஃது, சயீது, அப்துர் ரஹ்மானிப்னு ஔப், அபூ உபைதத்துல் ஜர்ராஹ் ஆகிய பதின்மரும் நிச்சயமாகச் சுவர்க்கவாதிகள் என்று நாம் சாட்சியம் கூறுகிறோம். தொழுகையில், "அல்லாஹு அக்பர்" என்று கூறும் போதெல்லாம் இரண்டு கைகளையும் உயர்த்துவதும், இரைந்து 'ஆமீன்' கூறுவதும், முஸ்லிம் ஆட்சியாளர்களுக்காகப் பிரார்த்திப்பதும், ஃதவாபுக்குரிய செயல்களாகும்.

"...வேண்டுமென்றே தொழுகையை விட்டவன் குப்ரான செயலைச் செய்தவனாவான். (தொழுகையல்லாத) வேறு நல்லமல்கள் எதையும் விட்டதால் குப்ரு வந்து விடாது... ஜும்ஆ, ஈத், மற்றுமுண்டான ஜமாஅத் தொழுகைகளைப் பாவியான அல்லது, பாவமே செய்யாத மனிதர்களின் பின்னால் (முக்ததியாக) நின்று தொழுவது கூடும். பாவம் செய்த ஒருவர் பின் நின்று தொழுததற்காக அந்தத் தொழுகையை மீண்டும் தொழுவது சரியன்று. அவ்வாறு தொழுபவர் பிரஸ்தாபத் தொழுகையின் ஃதவாபையே இழந்தவராவார். கிப்லாவை முன்னோக்கி நின்று தொழுபவருடைய ஜனாஸாவுக்காக ஜனாஸாத் தொழுகை தொழலாம். ஜனாஸாத் தொழுகைக்கு நான்கு தக்பீர்கள் உண்டு. ஆனால், இமாமாய் நிற்பவர் ஐந்து தக்பீர்கள் கூறிவிட வேண்டும். இவ்வாறு ஒரு தடவை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களே செய்துள்ளார்கள்..."

முடிவுரை

இந்த நான்கு இமாம்களும் திருக்குர்ஆனையும், நபி பெருமானார் (ஸல்) அவர்களுடைய நடைமுறையையும் முழுக்க முழுக்கப் பின்பற்றியவர்களாகவே தங்களுடைய மத்ஹபுகளை உண்டாக்கித் தந்துள்ளனர். அவர்கள் அவ்விதம் செய்ய வேண்டுவது எத்துணை அவசியமாக இருந்தது என்பதையும், அப்படிச் செய்திராவிட்டால் இஸ்லாமியக் கோட்பாடுகள் சுய நலமிகளாலும், இஸ்லாத்தின் எதிரிகளாலும் சின்னாபின்னமாக்கப்பட்டுச் சிதைந்து போயிருக்கும் என்பதையும் முன்னமேயே விளக்கியுள்ளோம். அதனால்தான், இந்த நான்கு இமாம்களுடைய மத்ஹபுகளில் ஏதேனும் ஒன்றைக் கட்டாயம் பின்பற்றியாக வேண்டுவது 'சுன்னத்-வல் ஜமாஅத்' தைச் சேர்ந்த ஒவ்வொருவருடையவும் கடமையாகி விட்டது. மகா ஞானிகள், மத்ஹபுகளின் நியமங்களுக்கும் மேலே சென்றுவிட்ட மகான்கள்கூட இந்த மத்ஹபுகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றியவர்களாகவே வாழ்ந்துள்ளனர். நமது ஆண்டகை ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களே ஹன்பலி மத்ஹபைத் தொடர்ந்ததுடன், அதன் பிக்ஹுச் சட்ட திட்டங்களை விளக்கி நூல் எழுதியுள்ளார்கள். எனவே, நாம் ஒவ்வொருவரும் இந்த மத்ஹபுகளில் ஒன்றைப் பின்பற்றித்தான் தீர வேண்டும் என்பது பெறப்படுகிறது.

அப்படி ஒரு மத்ஹபைப் பின்பற்றுபவர் சகல காரியங்களிலும் அந்த மத்ஹபின் கோட்பாடுகளையே பின்பற்றியாக வேண்டும். இது அவசியமானதாகும். தீராது என்ற நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும், பேணுதலான விஷயங்களிலும் தான் இதற்கு விதி விலக்கு உண்டு.

நான்கு மத்ஹபுகளுமே திருக்குர்ஆனையும், நபி பெருமானாரின் நடை முறையையும் அடிப்படையாகக் கொண்டே உண்டாகி இருப்பதால், ஒவ்வொன்றி லிருந்து ஒருவன் தனக்கு விருப்பமானதைப் பின்பற்றினால் என்ன என்று ஒரு கேள்வி எழலாம். உதாரணமாகத் தொழுகையை எடுத்துக் கொ:ள்வோம். அதில் தக்பீர் கட்டுவது, ஃதனா ஓதுவது, இமாம் ஜமாஅத்தில் சூரா பாத்திஹா ஓதப்பட்டதும் ஆமீன் சொல்வது முதலிய விஷயங்களில் ஹனபி மத்ஹபுக்கும் ஷாபியீ மத்ஹபுக்கும் வித்தியாசங்கள் உள்ளன. உண்மையில், இரண்டு விதமாகவும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுதுள்ளார்கள். சில சமயங்களில் அவர்கள் தொழுதிருப்பதை முன்நிறுத்தி இமாம் அபூ ஹனீபாவும், வேறு சில சமயங்களில் அவர்கள் தொழுதிருப்பதை முன்நிறுத்தி இமாம் ஷாபியீயும் இவ்விதம் திட்டம் வகுத்தனர். இஃதிப்படியிருக்க, ஒருவன் இரண்டு மத்ஹபின் படியான செயல் முறையைப் பின்பற்றியவையாக இருக்கின்ற நிலையில், ஒரு ரகஅத்தில் இமாம் அபூ ஹனீபா சொன்னபடியும், மறு ரகஅத்தில் இமாம் ஷாபியீ

சொன்னபடியும் தொழுதால் என்ன என்று வினவலாம். முதல் ரகஅத்தில் இமாம் ஜமாஅத்தில் சூரா பாத்திஹா ஓதப்பட்டதும் மௌனமாக ஆமீன் கூறிக்கொண்டு, இரண்டாவது ரகஅத்தில் சப்தமிட்டு ஆமீன் கூறினால் என்ன, தவறொன்று மில்லையே என்றும் வினவலாம்.

இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வொரு வரும் தத்தம் இஷ்டப்படி செய்வது என்று ஏற்பட்டால் எத்தகைய குழப்பம் உண்டாகும் என்பதைச் சற்றுச் சிந்தித்து பாருங்கள்!

அப்படிச் செய்வதன் மூலம் ஒவ்வொருவரும் விதவிதமான குழப்பங்கள் உண்டாக்கித் தமது வணக்கங்களின் பயனையே இழக்கவும் நேரலாம். எனவேதான், சுன்னத்-வல்-ஜமாஅத் என்ற கட்டுக் கோப்பை சேர்ந்தவர்கள். இந்த நான்கு மத்ஹபுகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றியாக வேண்டும். நான்கிலுமிருந்து சிற்சில விஷயங்களைத் தம் மனம் போன போக்கில் பின்பற்றுவது கூடாது (ஹராம்) என்று உலமாக்கள் விதித்தனர். சிறந்த சிந்தனையாளரும், ஞானியுமான மகாகவி இக்பால் கூட இதை வற்புறுத்தி யுள்ளார். தன் பெற்றோர்கள் ஒரு மத்ஹபைச் சேர்ந்த வர்களாக இருப்பதால், அவர்களுடைய பிள்ளைகளும், அந்த மத்ஹபிலுள்ளவர்களாய் இருப்பதுதான் இன்றுள்ள நடைமுறையாகும். இதையே 'தக்லீத்' என்பதில் நம்பிக்கையில்லாத இக்பால் தாம் முற்றும் இமாமுல் அஃலம் அபூ ஹனீபாவைப் பின்பற்றியதாகத் தெரிவிக்கிறார். ஒருவன் பின்னர் தன் ஆராய்ச்சி

கொண்டு, தான் கடைப்பிடித்து வரும் மத்ஹபை விட்டு, இந்த நான்கில் வேறொரு மத்ஹபில் சேர்ந்து கொள்வது கூடும்.

இவ்வுலகக் காரியங்களிலும், சன்மார்க்க கடைப் பிடிப்புகளிலும் மிகவும் இடைஞ்சலான சந்தர்ப்பத்தில் ஒருவன் தன் மத்ஹபின் படியான செயல் முறையை விட்டு, வேறு ஒரு மத்ஹபின் படியான செயல் முறையை மேற்கொள்ள அனுமதியுண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் தான் 'இன்ன இமாமின் மத்ஹபைப் பின்பற்றுகிறேன்' என்று நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். உதாரணமாகத் தொழுகைக்கு ஆயத்தமாவதற்கு ஒலுச் செய்வதற்கு ஹனபி மத்ஹபின்படி 'ஹவுளு' பத்தடி அகலமும், பத்தடி நீளமும் உள்ளதாக இருக்க வேண்டும். ஷாபியீ மத்ஹபுப்படியோ ஒன்றே கால் முழு நீளம், அதே அகலம், ஆழம் உள்ள 'ஹவுளு' ஒலுச் செய்யப் போது மானதாகும். எனவே, ஹனபி மத்ஹபைப் பின்பற்றும் ஒருவர், பத்து அடி நீளம், பத்து அடி அகலமுள்ள 'ஹவுளு' இல்லாத நிலையில், இந்தச் சிறிய 'ஹவு' ளில், 'நான் ஷாபியீ இமாமமைப் பின்பற்றி ஒலுச் செய்கிறேன்' என்று நிர்ணயத்துடன் ஒலுச் செய்து கொள்ளலாம். இது போலவே, ஷாபியீ மத்ஹபின்படி ஒலுச் செய்தவன் மணப்பதற்கு தடையற்ற பெண் ஒருத்தியின் மீது திரையில்லாமல் பட்டுவிட்டால் அவனுடைய ஒலு முறிந்து விடுகிறது. ஆனால், ஹனபி மத்ஹபின்படி அப்படி முறிவதில்லை. இந்த இரண்டு

முடிவுகளுமே இரண்டு ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டவைதாம். எனவே, கஃபத்துல்லாஹ்வை ஒலுவுடன் ''தவாப்'' செய்யும் ஷாபியீ மத்ஹபைப் பின்பற்றுபவர், அங்கே ''தவாப்'' செய்யும் பதினாயிரக்கணக்கான பெண்களில் யாராலாவது திரையின்றித் தொடப்பட்டால் ஒலு முறிந்தவராகி விடுகிறார். எனவே, இவர் ஒலுச்செய்யும் போதே தாம் தவாபில் ஒலுவுடன் இருப்பதற்காகத் தாம் ஹனபி இமாமைப் பின்பற்றி ஒலுச் செய்வதாக நிர்ணயம் செய்து கொண்டு ஒலுச் செய்யலாம் இப்படிப் பல விஷயங்களுண்டு. பிக்ஹுக் கிதாபுகளில் இது பற்றிய விபரங்களைக் கண்டு கொள்ளலாம்.

இந்த நான்கு மத்ஹபில் எந்த ஒன்றைப் பின்பற்றி அமல் செய்தவனும் நேர்வழியில் நடப்பவனாவான். இந்த நான்கு மத்ஹபுகளின் அழகு என்னவென்றால், இவற்றிடையுள்ள அபிப்பிராய பேதங்களிடையேயும் இந்த நான்கு மத்ஹபைச் சேர்ந்தவர்களும் தோளோடு தோள் சேர்ந்தவர்களாக, இந்த நான்கில் ஏதேனும் ஒரு மத்ஹபைப் பின்பற்றித் தொழுகை நடத்தும் இமாமுக்குப் பின்னால் நின்று தத்தம் மத்ஹபின்படியே தொழ முடிவது தான். இது சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

மேலும், எந்த ஒரு மத்ஹபைச் சேர்ந்தவனும் தன் மத்ஹபின் இமாமைப் போலவே, மற்ற மூன்று மத்ஹபின் இமாம்களையும் மதிப்பாகவும் கண்ணிய மாகவும் கருத வேண்டும். இவர்களில் யாரைப்

பற்றியும் இழிவான ஒரு வார்த்தையும் பேசக்கூடாது. அத்துடன், மற்ற மூன்று மத்ஹபைப் பின்பற்றுபவர்களைப் பழிப்பதும் கூடாது. இமாம் ஷாபியீ உண்டாக்கித் தந்த மத்ஹபு, இமாம் அபூ ஹனீபா உண்டாக்கித் தந்த மத்ஹபிலிருந்து பல வகைகளில் அபிப்பிராய பேதமுடையதாக இருப்பினும், இமாம் ஷாபியீ எவ்விதம் இமாம் அபூ ஹனீபாவை மதித்து வந்துள்ளார்கள், அவர்களுடைய அடக்கஸ்தலத்தில் அவர்கள் வகுத்துத்தந்த நியதிப்படி தொழுதார்கள் என்பதை நினைவு கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

சத்தியத்தைக் காப்பதற்காக இந்த இமாம்கள் காட்டிய மன உறுதி, நம்மனைவருக்கும் நல்லதோர் முன்மாதிரியாக அமையுமாக! வாழ்க்கை சோதனைகள் நிறைந்ததுதான். சத்தியத்தைப் புறக்கணித்துப் போக வாழ்வு பெற்ற யாரும் நல் வாழ்வு வாழ்ந்ததில்லை, இம்மையிலேயே அதற்கான தண்டனைகளை அடைகிறார்கள் என்பதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். எனவே, இந்த மகாத்மாக்களான இமாம்களுடைய வாழ்க்கை இந்த வழியிலும் கூட நமக்கு வழிகாட்டுமாக!